janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2024 பிப்ரவரி 25 - மார்ச் 02 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 47




## ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோதப் போக்கை கண்டித்து
## மத்திய தொழிற்சங்கங்கள், ஐக்கிய விவசாய முன்னணி சார்பாக

# நாடு தழுவிய வேலைநிறுத்தம் - மறியல்

## பல லட்சம் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆவேசம்!

**மோடி அரசாங்கத்தின் கார்ப்பரேட் சார்பு கொள்கைகளுக்கு எதிராக பிப்ரவரி 16 அன்று கிராமங்களில் பந்த் மற்றும் தொழில்துறை / துறைசார் வேலைநிறுத்தம், மறியல் இந்தியா முழுவதும் நடைபெற்றது.**

ஏ.ஐ.டி.யூ.சி, சி.ஐ.டி.யூ, தொமுச, எச்.எம்.எஸ், ஐ.என்.டி.யூ.சி, ஏ.ஐ.சி.சி.டி.யு, ஏஐயுடியுசி, எம்.எல்.எப், எல்.எல்.எப், டபிள்யு.பி.டி.யு.சி, எல்.டி.யு.சி, டி.யு.சி.சி ஆகிய தொழிற்சங்கங்களும், ஒருங்கிணைந்த விவசாய முன்னணி (எஸ்.கே.எம்) நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபட்டன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திமுக, மார்க்சிஸ்ட், காங்கிரஸ், மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட் (விடுதலை), எஸ்யுசிஐ, செங்கொடி கட்சி உள்ளிட்டவை கிராம பந்த் மற்றும் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவளித்தன.

ஜம்மு காஷ்மீரின் குப்கார் பிரகடனத்திற்கான மக்கள் கூட்டணி, தேசிய மாநாடு, மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் அவாமி தேசிய மாநாடு உள்ளிட்ட ஐந்து கட்சிக் கூட்டணியும் ஆதரவளித்தன.

மாணவர்கள், இளைஞர்கள், விவசாயத் தொழிலாளர் அமைப்புகளுடன், ஐந்து பெண்கள் அமைப்புகளும் நாடு தழுவிய போராட்டத்தில் பங்கேற்றன. பஞ்சாப் மாநிலத்தில் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது. ஒன்றிய, மாநில பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட நாடு முழுவதும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டில் மின்வாரியத் தொழிலாளர்கள், அணுமின் நிலையம், துறைமுகம், பிஎச்இஎல், தனியார் நிறுவனங்களின் தொழிலாளர்கள், ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள், கட்டுமானம், அமைப்பு சாரா தொழிலாளர்கள், உள்ளாட்சிகளின் தூய்மைப் பணியாளர்கள், அங்கன்வாடித் தொழிலாளர்கள் உள்பட லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட மையங்களில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மறியலில் ஈடுபட்டனர்.


சென்னை



பட்டுக்கோட்டை



தர்மபுரி

### சென்னை

சென்னை அண்ணா சாலையிலுள்ள தலைமை தபால் நிலையம் அருகே மறியல் போராட்டம் நடைபெற்றது. தொமுச பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்பி, கி.நடராஜன், ஏஐடியுசி தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி, தமிழ்நாடு பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர்கள் மு.சம்பத் (மத்தியசென்னை) அ.அருள் (வடசென்னை) ஆர்.அழகேசன் (தென்சென்னை), எச்எம்எஸ் தேசியத் தலைவர் க.அ.ராஜா ஸ்ரீதர், மு.சுப்பிரமணியன், சிஐடியு மாநிலச் செயலாளர் ஜி.சுகுமாறன், ஐஎன்டியுசி டி.வி.சேவியர், ஐக்கிய விவசாயிகள் முன்னணி கே.பாலகிருஷ்ணன் உட்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மறியலில் கைது செய்யப்பட்டனர்.

### கோவை


கோவை மத்திய தந்தி அலுவலகம் அருகே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

கட்சிக் கடிதம்

# அம்பலப்பட்டு நிற்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் 1






போர்க்குணமிக்க தோழர்களே!

**பிப்ரவரி 15 ஆம் நாள் உச்சநீதிமன்றம் அளித்திட்ட தீர்ப்பின் காரணமாக நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு, அசிங்கப்பட்டு, அம்மணமாக நிற்கிறது ஆர்.எஸ்.எஸ் கும்பல்.**

உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கும், ஆர்எஸ்எஸ்சுக்கும் என்ன சம்பந்தம் என கேட்கத் தோன்றும்.

பன்றி பல குட்டிகள் போடும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே! அதேபோன்று ஆர்எஸ்எஸ் என்கின்ற அமைப்பும் பல குட்டிகளை ஈன்றுள்ளது.

அத்தகைய டஜன் கணக்கான குட்டிகளில் ஒன்று தான் பாஜக என்கின்ற குட்டியாகும்.

இந்தப் பன்றிக்குட்டி ஆடாத ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கின்றது. இதன் பேய்த்தனமான ஆட்டத்திற்கு அளவே இல்லை.

நாற்றம் எடுக்கும் சாக்கடைக்குள் மூழ்கி மூழ்கி உடல் எல்லாம் சாக்கடை பூசிக்கொண்டு, பிறருக்கு இடையூறாக இருக்கும் என்பது குறித்து சிறிதும் கவலை கொள்ளாமல் நட்ட நடுவீதியில் வருகின்றது.

பட்டத்து யானை ஆற்றுக்குச் சென்றுநீராடி, தன் உடம்பில் இருந்த தூசி, அழுக்குகளை எல்லாம் அகற்றி, தனது தும்பிக்கையால் தண்ணீரை உறிஞ்சி உடல் முழுவதும் பீய்ச்சி சுத்தம் செய்து கொண்டு, தன் இருப்பிடம் நோக்கி கம்பீர நடை போட்டு செல்கின்றது.

செல்லும் வழியில் எதிரே சாக்கடைக்குள் விழுந்து, புரண்டு, தனது உடல் முழுவதும் சாக்கடை சகிதம் பன்றி வருவதைக் கண்ட பட்டத்து யானை, இந்த அசிங்கம் நம் அருகில் வந்தால், உடலில் உரசினால், நமது உடம்பும் சாக்கடையாகி விடுமே என சாலையின் ஒதுக்குப்புறமாக, ஓரமாக தனது பயணத்தைத் தொடர்ந்தது.

ஆனால் பன்றியோ மிகுந்த அகங்காரத்துடன், எவ்வளவு பெரிய உருவம் என்னைக் கண்டு அஞ்சி நடுங்கி ஓரமாகச் செல்கிறது என்று இறுமாப்பு கொண்டதாம்.

அத்தகைய பன்றியை ஒத்த பாஜக, நாட்டு மக்களை மதிக்காமல், சட்டங்களை மதிக்காமல், ஜனநாயகத்தை மதிக்காமல் தான்தோன்றித்தனமாக, தனக்கு சாதகமான முறையில் எத்தகைய சட்டங்களையும் நிறைவேற்றுவேன் என்கிற இறுமாப்பின் உச்சத்திற்குச் சென்றுள்ளது.

இந்த இறுமாப்புக்கு எதிராக உச்சநீதிமன்றம் பெரும் சம்மட்டியால் தாக்கியது தான் பிப்ரவரி 15 அன்று வழங்கிய தீர்ப்பாகும்.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு பொதுமக்கள், வணிகர்கள் என அனைவரும் தங்களால் இயன்ற நிதி உதவியை வழங்குகிறார்கள்.

இன்று, நேற்றல்ல. விடுதலைப் போராட்ட காலம் தொட்டு இவை நடைமுறையில் உள்ளதை அனைவரும் அறிவோம்.

விடுதலைப் போராட்ட காலத்தில், பெண்கள் தாங்கள் அணிந்திருந்த அணிகலன்களை எல்லாம் கழற்றி காந்தி மகானிடம் வழங்கியதை அறிவோம்.

பெரும் தொழில் நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவது குறித்து கட்டுப்பாடுகள் இருந்தன.

நிறுவனங்கள் ரொக்கப் பணமாக வழங்கக் கூடாது என்றும், ஒரு நிறுவனத்தின் மூன்று ஆண்டுகால லாபத்தில் 7.5 சதவீதத்திற்கு உட்பட்டே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கிட வேண்டும் என்றும் கட்டுப்பாடுகள் இருந்தன.

நிறுவனம் நட்டத்தில் இயங்குமேயானால், அவை நன்கொடை வழங்கக் கூடாது என்பன போன்ற கட்டுப்பாடுகள் அனைத்தையும் பாஜக அரசு உடைத்து, தரைமட்டமாக்கியது. அவ்வாறு செய்திடக் காரணம் என்ன?

ஒரு நிறுவனம் லாபத்தில் இயங்குகிறதா? அல்லது நட்டத்தில் இயங்குகிறதா? என்பது பற்றி எவ்விதக் கவலையும் பாஜக அரசுக்கு கிடையாது.

அது மட்டுமின்றி தன் லாபத்தில், அதுவும் மூன்று ஆண்டுகால லாபத்தில் 7.5 சதவீதம் மட்டுமே நிதி அளித்திடலாம் என்கிற கட்டுப்பாட்டை நீக்கி, நிறுவனம் தன் மனம் போன போக்கில் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று சட்டத்தை திருத்துவதன் நோக்கம், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நன்கொடை கொடுத்திட வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் காரணமாக அல்ல, மாறாக தனது கல்லாப்பெட்டியை நிரப்பிக் கொள்ள வேண்டும் என்கிற ஒரே நோக்கத்திற்காக சட்டம் திருத்தப்பட்டது.

கட்டுப்பாடுகள் அனைத்தையும் கடந்த 2017 ஆம் ஆண்டு பாஜக அரசு நீக்கி, தேர்தல் பத்திரம் என்கிற மகா ஊழல் நிறைந்த சட்டத்தை தன்னிச்சையாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொண்டது.

தனக்கு ஒன்றியத்தில் அதிகாரம் இருக்கின்றது, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி எத்தகைய சட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ள நாடாளுமன்றத்தில் விவாதமின்றி, மறுப்பின்றி கைகளைத் தூக்க தன் கட்சிக்காரர்கள் இருக்கின்றனர் என்கிற ஆணவத்துடன் நிறைவேற்றப்பட்ட சட்டம்தான் தேர்தல் பத்திரத் திட்டம்.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 29ஏ ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே நன்கொடை அளிக்க முடியும். அதுவும் மக்களவை அல்லது சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்குகளில் குறைந்தபட்சம் ஒரு சதவீத வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிக்க முடியும்.

இந்தத் தேர்தல் பத்திர முறையை உற்று நோக்கினால், இது யாருக்கு சாதகமானது அல்லது பாதகமானது என்பதை உணர முடியும்.

திருவிழா கூட்டத் திருடர்கள் போன்று, நாங்கள் ஊழலுக்கு எதிரானவர்கள் என்று திரும்பத், திரும்ப. நொடிக்கு நூறு தடவை கூறிவரும் யோக்கியவான் மோடி, தேர்தல் பத்திரங்கள் அரசியல் கட்சிகளுக்கு யார் கொடுத்தார்கள் என்பது தெரியாமல் திருட்டுத்தனமாக கொடுத்திட வழிவகை செய்தது ஏன்?.

பத்திரங்களை குறிப்பிட்ட மாதங்கள் மட்டுமே பெற முடியும் என்று முடிவு செய்தது ஏன்?.

மாதத்தில் 10 நாட்கள் என்பதனையும், அந்தப் 10 நாட்களை ஒன்றிய அரசே முடிவு செய்யும் என்றும் முடிவெடுத்தது ஏன்?.

பத்திரங்களைப் பெற்ற 15 தினங்களுக்குள் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அறிவித்தது ஏன்?.

மொத்தத்தில் தேர்தல் பத்திரங்கள் திட்டம் என்பது ஒன்றியத்தில் ஆளும் கட்சியாக உள்ள பாஜக என்கிற அரசியல் கட்சி மட்டுமே ஆதாயம் அடைந்திட வேண்டும் என்கிற அற்பத்தனம் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?.

“ஆதாயம் இல்லாமல் ஆற்றைக் கட்டி இறைக்க மாட்டான்” என்று ஒரு பழமொழி உண்டு.

அது போன்று பெரும் நிறுவனங்கள் ஆளும்கட்சியைத் தாங்களே தேடிச்சென்று நிதி வழங்குவது.

நிதி வழங்கக் காரணம் என்ன என்பது பரம ரகசியம் அல்ல, நிதியை வழங்கினால் வழங்கிய நிதியை காட்டிலும் பன்மடங்கு லாபம், கொள்ளை லாபம் அடையலாம் என்பதற்காகவே வழங்கப்படுகிறது.

சாதாரண, ஏழை எளிய மக்களுக்கு வரி மேல் வரிப் போடும் ஒன்றிய அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை அளித்ததை நாடு மறக்காது.

மாணவர்கள் பெற்ற கல்விக்கடனை ரத்து செய்ய மறுத்திட்ட இரக்கமற்ற ஒன்றிய அரசு!.

விவசாயிகள் கடனை ரத்து செய்ய மறுத்து வரும் ஒன்றிய அரசு!.

கொடிய கொரோனாவால் பாதிக்கப்பட்ட, சிறு, குறு, நடுத்தர தொழில் நடத்துவோருக்கு கருணை கட்ட மறுத்த ஒன்றிய அரசு!.

கார்ப்பரேட் நிறுவனங்களின் வங்கிக் கடனை வாராக் கடனாக்கி ரத்து செய்ததை நாடு மறக்கவில்லை.

தொடரும்!

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## தேர்தல் பத்திரம் என்றால் என்ன?

தேர்தல் பத்திரம் என்பது அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கும் ஒரு நிதி வழிமுறையாகும். அரசியல் கட்சிகளுக்கு தனிப்பட்ட நபரோ அல்லது நிறுவனங்களோ ரொக்கமாக பணம் கொடுத்து வந்த நிலையில், பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு கடந்த 2018ல் நடைமுறைக்கு கொண்டு வந்த திட்டம் தான் தேர்தல் பத்திரங்கள் ஆகும்.

இந்திய குடிமக்கள் மற்றும் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள், தாங்கள் விரும்பும் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் நன்கொடைகள் அளிக்கலாம். இதற்காக அவர்கள் குறிப்பிட்ட தொகை கொண்ட பத்திரங்களை வாங்க வேண்டும்.

ஸ்டேட் வங்கியில் ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய், ஒரு லட்சம் ரூபாய், ஒரு கோடி ரூபாய் என பத்திரங்களைப் பெற முடியும். இப்பத்திரங்களை ஸ்டேட் வங்கியின் குறிப்பிட்ட கிளைகளில் மட்டுமே வாங்க முடியும்.

இவை எல்லா மாதங்களிலும் வழங்கப்பட மாட்டாது. மாறாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் ஆகிய நான்கு மாதங்கள் மட்டுமே வழங்கப்படும்.

இந்த நான்கு மாதங்களில் அனைத்து நாட்களிலும் வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட 10 நாட்கள் மட்டுமே வழங்கப்படும். அந்த 10 நாட்கள் எது என்பதை ஒன்றிய அரசு அறிவிக்கும்.

இந்த தேர்தல் பத்திரங்களை சம்பந்தப்பட்ட கட்சிகள் 15 தினங்களுக்குள் வங்கியில் செலுத்தி, தங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்..

இல்லையெனில் தேர்தல் பத்திரங்களின் தொகை பிரதமர் நிவாரண நிதியில் வரவு வைக்கப்பட்டு விடும்.

உச்சநீதிமன்றம் குறிப்பிடுவதைப் போன்று, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவதில் இரு வகை உண்டு.

1, அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தில் வழங்குவது.

நல்ல கட்சி, நல்ல கொள்கையுள்ள கட்சி, நேர்மையாளர்களைக் கொண்ட கட்சி, இக்கட்சி வளர்வது நாட்டிற்கு நல்லது, மக்களுக்கு நல்லது என்ற அடிப்படையில், நல்லெண்ண அடிப்படையில் நிதி வழங்குதல் ஒரு முறை.

2, மற்றொரு முறை என்பது பிரதிபலன் எதிர்பார்த்து நன்கொடை வழங்குவது.

# தேர்தல் பத்திரங்கள் சட்ட விரோதமானவை: உச்சநீதிமன்றம் தீர்ப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய செயற்குழு வரவேற்பு




தேர்தல் பத்திரங்கள் சட்ட விரோதமானவை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயற்குழு வரவேற்பு தெரிவித்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:

தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கும் திட்டத்தை அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியச் செயலகம் வரவேற்கிறது.

கட்சி தொடர்ச்சியாக உறுதியுடன் தேர்தல்களில் கார்ப்பரேட்டுகள் தலையீடு மற்றும் அவை தேர்தல்களில் செல்வாக்கு செலுத்துவதையும் மற்றும் தேர்தல் பத்திரங்கள் திட்டத்தையும் எதிர்த்தே வந்துள்ளது. ஆனால் இப்பிரச்சனையில் முடிவெடுக்க உச்ச நீதிமன்றம் நீண்ட ஏழு ஆண்டுகளை எடுத்துக் கொண்டது துரதிருஷ்டவசமானது. மேலும் அத்தகைய தாமதம் இனி வரும் காலங்களில் தவிர்க்கப்படும் என கட்சி நம்புகிறது.

ஒருங்கிணைந்த தேர்தல் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் மீது விரிவான விவாதங்களை நடத்தவும், தேர்தல் சீர்திருத்தம் குறித்த இந்திரஜித் குப்தா குழு அளித்த, ‘தேர்தல்களுக்கு அரசே நிதியளிப்பது’ என்ற சிபாரிசை அமல்படுத்தவும் இந்தத் தீர்ப்பு உந்து சக்தியாக இருக்கும் எனவும் கட்சி எதிர்பார்க்கிறது. கடந்த பத்தாண்டுகளில் சமமானஒரேமட்டத்திலானதேர்தல்போட்டிக் களத்தை அனைத்து அரசியல்கட்சிகளுக்கும் பாஜக மறுக்க எல்லா முயற்சிகளையும் எடுத்தது மட்டுமின்றி, தேர்தல் நிகழ்முறையின் புனிதத்தைப் பாதிக்கவும் செய்தது. சுதந்திரமான நியாயமான தேர்தல்களுக்காகவும் நடுநிலையான தேர்தல் ஆணையத்திற்காகவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது பற்றுறுதியை மீண்டும் பறைசாற்றுகிறது.

தேர்தல் பத்திரங்கள் மூலம் யார் யார் எந்தெந்தக் கட்சிகளுக்கு எவ்வளவு நன்கொடை வழங்கினார்கள் என்ற முழு விவரங்களையும் பொதுவெளியில் வெளியிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோருகிறது. தேர்தல் பத்திரங்கள் என்ற வடிவத்திலான சட்டப்படியான ஊழலில் இருந்து யார் பலன் அடைந்தார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிந்து கொள்ள உரிமை உள்ளவர்கள்.

## தேர்தல் பத்திரம் எதையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பெறவில்லை டி.ராஜா விளக்கம்



பாஜக ஆட்சியில் தேர்தல் பத்திரம் திட்டம் கொண்டு வரப்பட்டதில் இருந்தே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள், தேர்தல் நிதி வசூலிப்பதில் வெளிப்படைத் தன்மை இருந்தால்தான், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சமமான களத்தை அனுமதிப்பதாக அமையும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக வலியுறுத்துகிறது.

மறைவான மற்றும் வெளிப்படை தன்மையற்ற தேர்தல் பத்திரத் திட்டத்தை எதிர்ப்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை நிலை என்பதால், அது யாரிடமிருந்தும் எந்தவொரு தேர்தல் பத்திரத்தையும் பெறவில்லை. இப்போது அரசியலமைப்பிற்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் செலவினப் பிரிவுக்கு நவம்பர் 4, 2023 அன்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யாரிடமிருந்தும் தேர்தல் பத்திரம் எதையும் பெறவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக்குழு வரவேற்பு




தேர்தல் பத்திரம்: உரிமையை நிலைநாட்டிய உச்ச நீதிமன்ற தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

ஆர்.எஸ்.எஸ். வழிநடத்தும் பாஜக ஒன்றிய அரசு 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய தேர்தல் பத்திரம் திட்டம் அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது. தகவல் பெறும் உரிமை சட்டத்துக்கு விரோதமானது என்று தீர்ப்பளித்து, தேர்தல் பத்திரம் தொடர்பான வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி உள்பட ஐந்து நீதிபதிகள் அமர்வு ஒரு மனதாக வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கக்கூடியது.

2019 ஆண்டு முதல் தேர்தல் பத்திரங்கள் மூலம் யார், யார், எந்தெந்த கட்சிகள், எந்தெந்த நிறுவனங்களிடம் எவ்வளவு நன்கொடை பெற்றுள்ளது என்பதை தேர்தல் ஆணையம் தனது இணைய தளத்தில் மார்ச் 13 ஆம் தேதிக்குள் வெளியிட வேண்டும் என்ற உச்ச நீதி மன்றத்தின் உத்தரவை பாஜகவின் சதிகார அரசியலை தோலுரித்து தோரணம் கட்டுவதாக அமைந்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது என்று தனது அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

### தேர்தல் பத்திரம் மூலம் ஒரு ரூபாயும் பெற்றதில்லை!
### இரா.முத்தரசன் விளக்கம்



கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் பத்திரம் மூலம் ஒரு ரூபாயும் பெற்றதில்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விளக்கமளித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

பாஜக ஒன்றிய அரசு பன்னாட்டு கார்ப்பரேட்டு நிறுவனங்களோடு இணைந்து செயல்படும் தனது கூட்டுக் களவாணி செயலை மறைத்துக் கொள்ள தேர்தல் பத்திரம் திட்டத்தை வெளியிட்டது. இத்திட்டம் செயல்பட்ட கடந்த ஐந்தாண்டுகளில் தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜக அதிகம் நிதி பெற்றிருப்பதை உச்ச நீதிமன்ற விசாரணையில் வெளியாகியுள்ளது. தேர்தல் பத்திரங்கள் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்கள் வழங்கிய நிதியில் 90 சதவீதத்துக்கும் அதிகமாக பாஜக பெற்றிருப்பதையும் செய்திகள் உறுதி செய்கின்றன.

வெளிப்படைத்தன்மை இல்லாத, வாக்காளர்களின் உரிமையை மறுக்கும், நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடைமுறைகளுக்கு எதிரான தேர்தல் பத்திரம் திட்டம் செல்லாது என உச்சநீதிமன்றம் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பில் தேர்தல் பத்திரங்கள் மூலம் இதுவரை எந்தெந்த கட்சிகள், எந்தெந்த நிறுவனங்களிடம் நிதி பெற்றுள்ளனர் என்ற விபரத்தை தேர்தல் ஆணையம் மார்ச் 13 ஆம் தேதிக்குள் தனது இணைய வலை தளத்தில் பதிவிட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி பெற்றுள்ள விபரங்கள் என்ற தலைப்பில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ள நிதி என்று வெளியாகி இருப்பது சரியல்ல. அது முற்றிலும் தவறான தகவலாகும் இது தொடர்பாக தேர்தல் ஆணையம் கேள்வி எழுப்பிய நேரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி “தேர்தல் பத்திரங்கள் மூலம் எந்தவித நிதியும் பெறவில்லை” என்பதை திட்டவட்டமாகவும் வெளிப்படையாகவும் கடிதம் எழுதியுள்ளது என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று விளக்கம் அளித்துள்ளார்.

## பட்டாசு ஆலைகள் விபத்து:
## அரசு தீவிரமாக கண்காணிக்க வேண்டும்

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், குண்டாயிருப்பு கிராமத்தில் இயங்கி வந்த தனியார் பட்டாசு ஆலையில் விபத்து ஏற்பட்டு நான்கு பெண்கள் உட்பட 10 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே கருகி மடிந்தனர் என்ற செய்தி பெரும் வேதனை அளிக்கிறது.

விருதுநகர்மாவட்டத்தில்செயல்படும்பெரிய, சிறிய பட்டாசு தயாரிப்பு தொழிலகங்களில் விபத்து தடுப்புக்கான ஏற்பாடுகள் கட்டாயம் இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில்விபத்துஏற்படாமல்தடுப்பதை மாவட்ட நிர்வாகத்தின் பொறுப்பாக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.


உயிரிழந்த தொழிலாளர் குடும்பங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் தலா ரூ.3 லட்சம் நிவாரண நிதி வழங்க உத்தவிட்டிருப்பது ஆறுதல் அளிக்கிறது. இந்த விபத்தில் உயிராபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் உயர் சிகிச்சைக்கான ஏற்பாடுகளை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

முத்தரசன்

## மேகதாது அணை: கர்நாடகம் பிடிவாதம் காட்டுவதை கண்டிக்கிறோம்

### இரா.முத்தரசன் அறிக்கை



மேகதாது அணை கட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமய்யா அறிவித்துள்ளார். கடந்த 12 ஆம் தேதி கர்நாடக மாநில சட்டப்பேரவையில் 2024 – 25 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த போது, மேகதாது அணை கட்டுவதில் கர்நாடக அரசு உறுதியாக இருக்கிறது. அதற்கான முறையில் ஒரு மண்டலக் குழுவும், இரண்டு துணைக் குழுக்களும் அமைக்கப் பட்டிருப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

காவிரி நதி நீர் பங்கீடு நான்கு மாநிலங்கள் கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி தொடர்புடைய பிரச்சினையாகும்.

காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் மேகதாது அணை தொடர்பான பிரச்சினையை நிகழ்ச்சி நிரலில் சேர்க்க வேண்டும் என்ற கர்நாடகத்தின் முன் மொழிவுக்கு தமிழ்நாடு அரசு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கர்நாடக முதலமைச்சர் அறிவிப்பு மாநிலங்களிடையே நிலவும் நல்லுறவுக்கு வலுச்சேர்க்காது. கூட்டாட்சி கோட்பாட்டுக்கும் எதிரானது என்பதை கர்நாடக மாநில அரசும், மக்களும் உணர வேண்டும்.

சமூக உறவுக்கு குந்தகம் ஏற்படுத்தும் கர்நாடக மாநில முதலமைச்சரின் அறிவிப்புக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## வினாடி - வினா

1 கண் லென்சின் ஒளிபுகும் தன்மை குறைபாட்டினால் உண்டாகும் நோய் எது?

2 எந்தத் தனிமத்தின் ஐசோடோப் புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது?


3 முதல் அகிலம் என்று அழைக்கப்படும் அனைத்துலக கம்யூனிஸ்ட் அமைப்பின் இன்னொரு பெயர் என்ன?

4 துரு என்பதன் வேதிப் பெயர் என்ன?

5 ஆறு கடலுடன் கலக்கும் இடத்தின் பெயர் என்ன?

6 ஐ.நா. பொதுச்சபை ஆண்டுக்கு எத்தனை முறை கூடுகிறது?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 47

## குசேலரின் அவலும், தேர்தல் பத்திரமும்!

சம்பல் என்ற ஊரில் கல்கி கோவிலுக்கு பிப்ரவரி 19.2.2024ல் அடிக்கல் நாட்டு விழா. இப்போதெல்லாம் கோவில் அடிக்கல் நாட்டுவது பிரதமரின் வேலை அல்லவா?

அவர் ஆன்மீக வேலைகளை மேற்கொள்வதே அரசியலுக்காகத்தான். அடிக்கல் நாட்டிய மோடி, பேசியதும் அரசியல் தான்.

“சுதாமா, கிருஷ்ணருக்கு அவல் கொடுத்தார். இப்போது கொடுத்திருந்தால், அதை வீடியோ எடுத்து பொதுநல வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள். உச்சநீதிமன்றமும் அதை ஊழல் என்று தீர்ப்பு கொடுத்திருக்கும்” என்று மோடி பேசியிருக்கிறார்.

தேர்தல் பத்திரங்கள் அரசியல் சாசனத்துக்கு விரோதமானவை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தான் அவர் நக்கல் செய்கிறார். அவர்களது சுதாமாவுக்கு, இங்கு குசேலன் என்று பெயர். ஒரு ஆளுக்கு இந்த நாட்டில் இரண்டு பெயர். இந்த லட்சணத்தில் ஒரே இந்தியா முழக்கம் வேறு!

குசேலர் அதிக குழந்தைகளைப் பெற்றுவிட்டு கஷ்டப்படுகிறார். கிருஷ்ண பரமாத்மாவை பார்த்து வறுமையை எடுத்துச் சொல்லி உதவி பெற்றுவருமாறு மனைவி குசேலரை அனுப்புகிறார். எதுவும் இல்லாதால், அரிசியை இடித்து கொஞ்சம் அவலைக் கொடுத்து விடுகிறார் என்பது கதை.

இதைத்தான் தேர்தல் பத்திரத்துடன் ஒப்பிடுகிறார் பிரதமர் மோடி.

நியாயமான தேர்தல் நடத்துவதற்கு, அரசியல் கட்சிகளுக்கு வழங்கும் நன்கொடைகளில் வெளிப்படைத்தன்மை அவசியம் என்பதால், 2017–18 பட்ஜெட்டில் தேர்தல் பத்திரத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

இதற்காக மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், கம்பெனி சட்டம், வருமான வரி சட்டம் ஆகியவை திருத்தப்பட்டன.

ஆனால் ஆர்எஸ்எஸ் செய்யும் எதுவும் உல்டாவாகத்தான் இருக்கும். 20,000 ரூபாய்க்கு அதிகமாக ஒருவர் நன்கொடை தந்தால், அவருடைய அடையாளத்தை அறிவிக்க வேண்டும். ஒரு நிறுவனம், தனது லாபத்தில் 7.5% வரை தான் நன்கொடை கொடுக்க முடியும் என்றெல்லாம் முதலில் இருந்தது.

புதிய திருத்தங்களின்படி, லாபமோ நஷ்டமோ எந்த நிறுவனமும், எந்த உச்சவரம்பும் இல்லாமல் நன்கொடையை, தேர்தல் பத்திரமாக வழங்கலாம். ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாய் வரை பத்திரங்களை ஸ்டேட் வங்கி விற்கும். ஒருவர் எத்தனை பத்திரங்கள் வேண்டுமானாலும் வாங்கி அரசியல் கட்சிக்கு நன்கொடை தரலாம். யார் பணம் கொடுத்தார் என்ற தகவலை வெளியிட வேண்டியது இல்லை.

எப்பேர்ப்பட்ட வெளிப்படைத் தன்மை!!!

செல்வ வளம் பெறுவதற்காகத்தான் குசேலர் கிருஷ்ணருக்கு அவல் கொடுத்தார்.

“முழுக்க முழுக்க பதில் உதவியை எதிர்பார்த்தே தேர்தல் பத்திரம் மூலம் கார்ப்பரேட் நன்கொடைகள் தரப்படுகின்றன என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

ஆனால் குசேலர் வறியவர். கிருஷ்ணர் தனது தெய்வ சக்தியால் செல்வத்தை கொடுத்தார். கார்ப்பரேட்டுகளோ பெரும் செல்வந்தர்கள். நாட்டின் சொத்தை எடுத்து அவர்களைக் குபேரர்கள் ஆக்குகிறார் மோடி.

குசேலர் தந்த அவலில் முதல் பிடியை கிருஷ்ணன் வாயில் போட்ட போது, குசேலனின் ஏழ்மை விலகியது. இரண்டாம் பிடியை போட்டதும் புகழும் கீர்த்தியும் அவரது குடும்பத்துக்கு கிடைத்தது. மூன்றாவது பிடியை எடுத்த போது, தன்னையும் தன் பரிவாரங்களையும்கூட கொடுத்து விடுவார் என்று பயந்து, மனைவி ருக்மணி அவரது கையைப் பிடித்து வாயில் போடாமல் தடுத்து விட்டாள் என்பது குசேலர் கதை.

மோடி முதலில் பதவி ஏற்ற போது அதானி 6.6 பில்லியன் டாலர் சொத்தோடு உலக முதலாளிகள் பட்டியலில் 208 வது இடத்தில் இருந்தார். 2019 இரண்டாவது தடவை பதவி ஏற்ற போது 15.7 பில்லியன் டாலருடன் 167 வது இடம். அடுத்த தேர்தல் வருவதற்கு முன்னதாகவே 105.4 பில்லியன் டாலர் சொத்துடன் இரண்டாவது இடத்துக்கே போனார்.

மூன்றாவது பிடியை நோக்கி நகர்வதற்கு முன்பாகவே, மோடியின் முன் கையை உச்ச நீதிமன்றம் பிடித்திருக்கிறது. விட்டால், நாட்டின் சொத்துக்கள் மட்டுமல்ல நாடும் சேர்ந்து போய்விடும்.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில், முழுங்கையும் நீள விடாமல் தடுப்பது வாக்காளர்களின் பொறுப்பு.

இராமாயணத்தை மறுக்கும் தொல்லியல், வரலாற்றுச் சான்றுகள் 3

# அயோத்தியில் நகரம் இருந்ததா?

**தென்னிந்தியா தவிர்த்த இந்தியத் துணைக்கண்ட வடபகுதியின் தொல்லியல் வரலாறு குறிப்பாகக் கடந்த சில ஆயிரம் ஆண்டுகளைப் பொறுத்த வரையில் தொல்லியல் அடிப்படையில் நன்கு அறியப்பட்டு விட்டது.**



சுந்தரசோழன்

ஹரப்பா நாகரீகத்தின் கண்டுபிடிப்பு பண்டைய நம்பிக்கைகளுக்கு அளித்தது போன்ற அதிர்ச்சி தரும் மாற்றுச் சான்றுகள் எவையும் வெளியாகும் வாய்ப்புகள் வெகு வெகு குறைவு என்பதை நாம் உறுதிபடக் கூறலாம்.

அதிலும் குறிப்பாக ஹரப்பா நாகரீகத்திற்குப் பிந்தைய சமூகங்களின் பொருளாயத அடையாளங்கள் மிகத் தெளிவாகவே வரலாற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குதிரைகள் மற்றும் ரதம் எனப்படும் தேர்களைப் போர்களில் பயன்படுத்திய மக்கள் சமூகம் ஒன்று, உண்மையில் ரத்தமும் சதையுமாக இம்மண்ணில் வாழ்ந்தது என்பது உண்மையானால், அது உறுதியாகப் போதுமான தொல்லியல் சான்றுகளை விட்டுச் சென்றிருக்க வேண்டும். அதற்கும் மேலாக, அவை அந்நிகழ்வுகள் நடைபெற்றதாகக் கூறப்படும் காலத்திற்கு உரியவையாகத் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் நிறுவப்பட வேண்டும்.

ஆனால் அத்தகைய சான்றுகள் ஒன்று கூடக் கிடையாது என்பதில் ஐயமில்லை. இராமாயண நிகழ்வுகள் பல லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய திரேதாயுகத்தில் நடைபெற்றன, அல்லது 75 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றன என்றால், கி.மு. 1500 ஆண்டு அளவில் ரிக்வேத ஆரியக் குழுக்களால் இந்தியத் துணைக்கண்டத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்ட குதிரைகள் மற்றும் தேர்கள் ஆகியவை அவற்றில் இடம் பெற்றிருந்தது எப்படி? என்ற கேள்விக்கு இராமாயணம் மிகப் பழமையானது என்று நம்புகிறவர்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய பதில்கள் எதையும் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது என்பதில் ஐயமில்லை.

அயோத்தி நகரில் அரண்மனைகள் மட்டுமின்றி மாளிகைகள் உள்ளிட்ட கட்டுமானங்கள் பலவும் கொண்ட அழகிய செல்வம் கொழிக்கும் நகரமாக இருந்தது என்று வால்மீகி இராமாயணம் சித்தரிக்கிறது.

அது உண்மையானால், சுட்ட செங்கற்களின் பயன்பாடு இல்லாமல் அத்தகைய பிரம்மாண்ட நகரத்தைக் கட்டியிருப்பது சாத்தியமற்றது. இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்த வரையில், ஹரப்பாவில் மட்டுமே பெரும் எண்ணிக்கையிலான சுட்ட செங்கற்களைப் பயன்படுத்தி நகரம் கட்டப்பட்டது பற்றிய தொல்லியல் ரீதியாக உறுதி செய்யப்பட்ட சான்றுகள் மூலம் அறிகிறோம்.

அதற்கு முன்னரும் சரி, அதற்குப் பின்னரும் சரி, வெகு காலம் வரையில் அத்தகைய கட்டமைப்புகள் கிடையாது. ஹரப்பா காலத்திற்குப் பிந்தைய வேதகால மக்கள் சுட்ட செங்கற்களைப் பற்றி அறியாதவர்களாக இருந்தனர். சமஸ்கிருதத்தில் செங்கல்லைக் குறிக்கும் விதமாக இடம் பெற்றுள்ள இஷ்டகா என்ற சொல்லே காலத்தால் மிகப் பிந்தையதாக இருக்கும்.

ஹரப்பாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் சுமார் 900 ஆண்டுகள் கடந்த பின்னரே இந்தியத் துணைக்கண்டத்தில் அடுத்த நகரமயமாக்கல் நடைபெற்றது. அந்நகரமயமாக்கலும் இராமாயணம் குறிப்பிடும் இடங்களில் அல்லாமல் வேறு இடங்களில் மட்டுமே நடைபெற்றன எனச் சான்றுகள் காட்டுகின்றன. ஆகவே, இராமாயணத்தில் குறிப்பிடப்படுவது போன்ற பிரம்மாண்ட மாளிகைகள் கொண்ட மாபெரும் நகரம் எதுவும் உண்மையில் இருந்தமைக்கான சான்றுகள் எள்ளளவும் கிடையாது.

அயோத்தியாவில் நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் அத்தகைய பண்டைய நகரத்தைக் குறிக்கும் இடிபாடுகள் அல்லது சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட பண்டைய சமூகத்தை அல்லது குறிப்பிட்ட காலத்தின் வரலாற்றைத் தொல்லியல் மற்றும் வரலாற்று அடிப்படையில் நிறுவ வேண்டுமானால் அந்தச் சமூகத்தின் இருப்பைக் கூறும் விதமான வசிப்பிடங்கள், புதைப்பிடங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், மண்பாண்டங்கள் மற்றும் ஆயுதங்கள் போன்ற சான்றுகள் அவசியமாகும். அத்தகைய சான்றுகள் கிடைத்தால், அவற்றைக் கால நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் அடிப்படையில் மட்டுமே அதன் இருப்பை உறுதி செய்ய முடியும். அத்தகைய சான்றுகள் எதுவும் கிடைக்காத வரையில் மதவியல் புனைகதைகள் மற்றும் காவியங்களில் கூறப்பட்ட கதைகளை வெறும் கற்பனைக் கதைகளாக மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இராமாயணம் குறித்த விசயத்தில் இது தான் உண்மையாகும்.

அயோத்தி ஒரு சிறப்பு மிக்க, எழில் பொருந்திய, செல்வ வளம் கொழிக்கும் நகரமாக இருந்தது என்று வால்மீகி இராமாயணம் கூறுகிறது. ஆனால் இராமாயணத்துடன் தொடர்புடைய அயோத்தி மற்றும் இதர இடங்களில் இது வரையிலான அகழ்வாய்வுகளில் அத்தகைய பழமையான நகரத்தின் சுவடுகள் கூட எதுவும் கிடைக்கவில்லை!! கிடைத்த ஒரு சில தொல்லியல் சான்றுகளும் கூட, பவுத்த மற்றும் சமணத்துடன் தொடர்புடையவையாக இருந்தனவே தவிர இராமாயணத்துடன் தொடர்புடையவையாக இருக்கவில்லை.

வசிப்பிடங்கள், புதைப்பிடங்கள், கல்வெட்டுகள்,



நாணயங்கள், மண்பாண்டங்கள் மற்றும் ஆயுதங்கள் போன்ற எந்தச் சான்றுகளும் இது வரை கிடைக்கவில்லை. ஆகவே தொல்லியல் ரீதியாக இராமாயணக் கதை குறித்த எவ்விதச் சான்றுகளும் கிடையாது என்பதே உண்மையாகும்.

இது தவிர இராமாயணம் ஒரு புனைகதை மட்டுமே எனக் காட்டும் வேறு பல சான்றுகளையும் நாம் முன்வைக்க முடியும்.

# தேர்தல் பத்திரம் பாஜகவின் பண வக்கிரம்!




த.லெனின்

**தேர்தல் நிதியில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வரவும், ஒரு கட்சி அல்லது வேட்பாளரின் பணம் எங்கிருந்து வருகிறது? அதை அவர்கள் எப்படிச் செலவிடுகிறார்கள் என்பதை வாக்காளர்கள் தெரிந்துகொள்வதே சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் முறைக்கு அடிப்படை.**

தேர்தல் பத்திரங்கள் இதனை மீறியதால் தான் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, சமீபத்தில் அதிரடித் தீர்ப்பு வழங்கியது. தீர்ப்பில் இதனை "அரசியலமைப்புக்கு எதிரானது" என்றும் தேர்தல் ஆடுகளத்தில் சம வாய்ப்பு தர தவறிவிட்டது என்றும் கூறி உடனே இதனை ரத்து செய்ய ஆணையிட்டுள்ளது.


அரசியல் கட்சிகளுக்கு வெளிப்படைத் தன்மையற்ற நிதியுதவியை அனுமதித்த ஒன்றிய அரசின் தேர்தல் பத்திரத் திட்டத்தின் சட்டப்பூர்வ செல்லுபடியை எதிர்த்து தொடரப்பட்ட மனுக்கள் மீதான வழக்கில் ஏகமனதாக இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது




### கருவின் குற்றம்!

தேர்தல் பத்திரங்கள் நிதி மசோதா (2017) படி, இந்திய அரசு 2018 ஜனவரி 2 அன்று வெளியிட்ட அரசானை மூலம் தேர்தல் பத்திரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்தல் பத்திரங்கள் ரூபாய் 1,000, 10,000, 1,00,000 மற்றும் 1 கோடி மதிப்புகளில் பாரத ஸ்டேட் வங்கியால் வெளியிடப்படுகிறது

தேர்தல் பத்திரங்களில் நன்கொடையாளரின் பெயர் இருக்காது. இதனால், நன்கொடையாளரின் அடையாளத்தை பொது மக்களும், அரசியல் கட்சிகளும் அறிய முடியாது. தேர்தல் பத்திரங்களை நன்கொடையாக செலுத்துபவருக்கும் அதனைப் பெறும் அரசியல் கட்சிகளுக்கும் வருமான வரி விலக்கும் கிடைக்கும்.



முன்பு, நிறுவன சட்டத்தின் கீழ் எந்த வெளிநாட்டு நிறுவனமும் இந்தியாவில் உள்ள எந்த அரசியல் கட்சிக்கும் நன்கொடை அளிக்க முடியாது.

நிறுவனங்கள் சட்டப் பிரிவு 182 இன் படி ஒரு நிறுவனம் தனது சராசரி மூன்று வருட நிகர லாபத்தில் அதிகபட்சமாக 7.5% அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடைகளாக வழங்கலாம். இது 2013 வரை 5% தான் உச்சவரம்பாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது

இச்சட்டத்தின் அதே பிரிவின்படி, நிறுவனங்கள் தங்கள் வருடாந்திர கணக்கு அறிக்கையில் தங்கள் அரசியல் கட்சிகளுக்கு வழகப்பட்ட் நன்கொடை விவரங்களை வெளியிட வேண்டும்.

தேர்தல் நிபந்தனைகளில் இந்த நிபந்தனை நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்பதை உறுதி செய்வதற்காக இந்திய அரசால் கொண்டுவரப்பட்ட நிதி மசோதாவில் உரிய திருத்தம் கொண்டு வந்தது. இதனால் இந்திய, வெளிநாட்டு மற்றும் போலி நிறுவனங்கள் கூட தங்கள் பங்களிப்பை யாரிடமும் தெரிவிக்காமல் அரசியல் கட்சிகளுக்கு கமுக்கமாக அளிக்கலாம் என்ற மோசமான கருப்பு பணம் சகதியில் விழ வைத்தது. இப்படி வந்த ஒட்டுமொத்த பணத்தில் பெரும் பகுதி 85% க்கும் மேல் பாஜகவிற்கு தான் சென்றுள்ளது என்பது எதைக் காட்டுகிறது?

தேர்தல் பத்திர முறை, தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் அரசியல் சாசன பிரிவு 19(1) ஆகியவற்றை மீறும் வகையில் உள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்கள் கட்சிகளுக்கு நிதி தரும்போது அதற்கு கைமாறு எதிர்பார்க்க வாய்ப்பு உள்ளது. கறுப்பு பணத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்தை அடைய தேர்தல் பத்திரங்களைத் தவிர வேறு பல வழிகள் உள்ளன.

அரசிடம் கணக்கு கேட்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது என்பதை பல தருணங்களில் நீதிமன்றங்கள் சொல்லியுள்ளன. நன்கொடை தருவோர் குறித்த விவரங்களை தெரிவிக்கத் தேவையில்லை என்பது வாக்காளர்களின் உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது.

எனவே, தேர்தல் நன்கொடை அளிக்க வகை செய்த வருமான வரி திருத்தச் சட்டம், மக்கள் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டம் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திர முறை தொடர்பான மற்ற சட்டத் திருத்த மசோதாக்களும் இத்தோடு ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திரம் சட்டம் மட்டுமின்றி, கம்பெனி சட்டத் திருத்த மசோதாவும் ரத்து செய்யப்படுகிறது என்று உச்ச நீதிமன்றம் அழுத்தம் திருத்தமாக தனது தீர்ப்பில் பதிவு செய்துள்ளது

மேலும் 2019 ஆம் ஆண்டு முதல் தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளித்தோர் விவரங்களை எஸ்பிஐ வங்கி வெளியிட வேண்டும். தேர்தல் பத்திரங்கள் மூலம் வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்பின் விவரங்களை மார்ச் 6 ம் தேதிக்குள் வழங்க வேண்டும். அதேபோல், நன்கொடை கொடுத்தோர் குறித்த விவரங்களை தேர்தல் ஆணைய இணையதளத்தில் ஏப்ரல் 13 ம் தேதிக்குள் வெளியிட வேண்டும்'' என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

### அரசின் தேர்தல் நிதியுதவி!

இதற்கு மாற்றாக தேர்தல்களுக்கு அரசு அளிக்கும் நிதியுதவி பல நாடுகளில் பின்பற்றப்படுகிறது, பெரும்பாலும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவின் சில மாநிலங்களிலும் பின்பற்றப்படுகின்றன. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் அரசின் நிதியை அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்குகின்றன. குறிப்பாக பெண்களின் பிரதிநிதித்துவம், வாக்காளர்களின் அரசியல் கல்வியை ஊக்குவிப்பதற்காக இவை பயன்படுத்தப்பட்டு நல்ல வளர்ச்சியையும் கண்டிருக்கின்றன.

ஸ்காட்லாந்து போன்ற நாடுகளில்மாற்றுத்திறனாளிகளின் அரசியல் பங்கேற்புக்கான தனி நிதி ஊக்குவிப்பும் உள்ளது.

இந்தியாவில் இந்திரஜித் குப்தா தலைமையிலான தேர்தல் சீர்திருத்த குழு அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் நிதியை அரசு வழங்க வேண்டும் என்ற பரிந்துரையும் சீர்தூக்கி பார்த்து நடைமுறைப்படுத்த இந்திய அரசு முன் முயற்சிகளை எடுக்க வேண்டும்.

எனவே இந்தியாவில் தேர்தல் சீர்திருத்தங்கள் தேவை. அது அனைவருக்குமான பொது வாய்ப்பை தட்டிப் பறித்து விடக்கூடாது ஆனால் 2018 இல் கொண்டு வரப்பட்ட இத்தேர்தல் பத்திர திட்டம் சீர்திருத்தம் அல்ல ! மாறாக சீர்குலைவு நடவடிக்கையாகவே மாறிப் போனது. அத்தோடு பன்மைத்துவ சமூக அமைப்பை கொண்டிருக்கும் இந்திய ஜனநாயக முறையில் ஒவ்வொரு வாக்குக்கும் உரிய மதிப்பை தரும் விதத்தில் தேர்தல் நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

குறிப்பாக விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை என்பதுதான் இன்று இந்திய ஜனநாயகத்திற்கான ஒரே மாற்று அதன் மூலம் தான் நாம் நல்ல பலன்களை அடைய முடியும். இதனை அமல்படுத்தும் நடவடிக்கையே உண்மையில் மெய்யான சீர்திருத்தம் அதற்கு பாஜக தயாரா?

மாவட்டங்கள் தோறும் பாஜகவிற்கு நவீன வசதிகளோடு புதிய மாவட்ட அலுவலகங்கள், தலைவர்களுக்கு பளபளக்கும் விலை உயர்ந்த சொகுசு கார்கள், பக்க வாத்தியங்களுக்கும் இதே போன்ற கார்கள், பகட்டு விளம்பரப் பதாகைகள், மக்களை திரட்ட கோடிக்கணக்கில் பணம் செலவழிப்பு, தேர்தலுக்கு தண்ணீரைப் போல பணத்தை செலவழிக்கும் முறை இவையெல்லாம் பாஜகவின் நவீன திருவிளையாடல்களாக மாறிப் போய்விட்டது. மாறுபட்ட கட்சி என்று தங்களை தாங்களே கூறிக் கொண்டது இப்படி தான் என்பதை மெய்ப்பித்திருக்கிறது இன்றைய அவர்களது நடைமுறை !

தொடர்புக்கு 9444481703


## நிதி அளிப்பதால் ஆதிக்கம்



கட்சிக்கு நிதியை அளிக்கும் நிறுவனங்கள் ஆட்சியாளர்கள்,அரசியல்வாதிகளின் கொள்கையில் நியாயமற்ற செல்வாக்கை செலுத்துவதும் தொடர்ந்தது. தங்களது வருமானத்தில் 5% வரைதான் நன்கொடை அளிக்க முடியும் என்ற காரணத்தால் பரிவர்த்தனைகளை மறைமுகமாக செய்து வந்தன இத்தகைய பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர விதிமுறைகள் மற்றும் வரம்புகள் இல்லை. எனவே அரசு சலுகை சார் முதலாளியம் தங்களது சொந்த நலனுக்காக செயல்படும் அரசியல் கட்சிகளுக்கு அள்ளி,அள்ளி கொடுத்து தாங்களும் மிகப்பெரும் லாபத்தை கைமாறாகப் பெற்றனர்.

தனியார் மயமாக்கல் என்ற கொள்கையால் பொதுத்துறை நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்கு தாங்கள் பெற்றுக்கொண்டு அதற்கு கைமாறாக பாரதிய ஜனதா கட்சிக்கு கையூட்டு தருவதற்கு தான் இந்த தேர்தல் பத்திரங்கள் தெளிவான பாதை அமைத்தது !

## ஜெர்மனி முன்மாதிரி!




ஜெர்மனியில் பின்பற்றப்படும் அரசியல் கட்சிகளுக்கான அரசின் நிதியுதவி தற்போது மிகவும் முற்போக்கான நடைமுறையாகக் கருதப்படுகிறது. இது போன்ற 'பொருத்தமான நிதி உதவிகள்', ஒரு கட்சியின் வருமானத்தில் 50% வரை அளிக்கப்படுகிறது. ஒரு கட்சிக்கான தொகையானது ஒரு கட்சி பெறும் வாக்கு சதவிகிதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.இதற்கு உச்சவரம்பும் உள்ளது.

கடந்த ஜனவரியில், ஜெர்மனியின் உச்ச நீதிமன்றம், ஜெர்மன் ஜனநாயகத்தை 'வெளிப்படையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாக' கண்டறிந்த ஒரு சிறிய அளவில் இயங்கும் தீவிர வலதுசாரிக் கட்சிக்கான நிதியைக் குறைத்து அபராதம் விதித்தது நோக்கத்தக்கது.

நினைவு நாள்
பிப்ரவரி
26

# தட்டி எழுப்புவேன் என்றீரே தா.பா.



டி.எம்.மூர்த்தி

**1963ம் ஆண்டு, ஜனவரி மாதம் 14ம் தேதி, கட்சி பொதுக்கூட்டத்தில் இலக்கியப் பேராசான் ஜீவா முழங்குகிறார்: "கம்யூனிஸ்ட் கட்சியை கட்டி வளர்த்து வெற்றிவாகை சூடுகிற வரையில் சாவே வந்தாலும் சாக மறுத்துப் போராடுவேன்." அந்தக் கூட்டத்தில் உடனிருந்தவர் இளைய ஜீவா தோழர் தா.பா.**

அப்படி முழங்கிய சிங்கம் நான்கே நாட்களில், ஜனவரி 18ல் நிரந்தரமாக தனது கர்ஜனையை நிறுத்தி விட்டது. 'தாமரை' இலக்கிய இதழ் அற்புதமாகத் தயாரித்த ஜீவா மலரில் "சாக மறுப்பேன் என்றீரே ஜீவா" என எழுத்தோவியம் தீட்டினார் தோழர் தா.பா.

சரியாக 58 ஆண்டுகள் ஒரு மாதம் கழிந்த பின், 2021 பிப்ரவரி 18ல் மதுரையில், 89 வயதான அந்த இளைய ஜீவா முழங்கினார்: "என்னையும், எனது செம்படையையும் எந்தக் கொம்பனாலும் அடக்க இயலாது. சாகும் வரை எனது நாவால் இந்த நாட்டை தட்டியெழுப்புவேன்"

பிப்ரவரி 21ல் எனது மகனின் திருமணத்தை நடத்தி வைக்க அவர் வருகை தந்தார். உடல் சோர்ந்து இருக்கும் நிலையில், திருமணத்திற்கு வரவேண்டாம், மணம் முடிந்தவுடனேயே மணமக்களை நேரில் வீட்டுக்கு அழைத்து வருகிறேன் என்று நான் விண்ணப்பித்ததை அவர் ஏற்கவில்லை. எல்லோரும் பேசியபின் நிறைவாக நீண்ட நேரம் நெஞ்சார வாழ்த்திப் பேசினார் அவர்.

சரியாக நான்கே நாட்கள். சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை யிலேயே, பிப்ரவரி 25 ஆம் தேதி தனது சிந்தனையை, செயலை, பேச்சை நிறுத்திக் கொண்டார்.

ஆம் பெரிய ஜீவாவும், இளைய ஜீவாவும், தமது மரணத்துக்கு முன்னால் மேடை ஏறாமல் இருந்தது நான்கே நான்கு நாட்கள்தான்!

அவரைப்போல் வேறு யாரும் பேசி, நான் பார்த்ததில்லை. ஒரு வீணை வித்துவான் தன் விரல்களால், நரம்புகளை மாற்றி மாற்றி மீட்டுவதைப் போல; ஒரு புல்லாங்குழல் கலைஞர் துவாரங்களை மூடியும், பாதி திறந்தும், முழுக்கத் திறந்தும் வாசிப்பதைப் போலத்தான் அவர் பேச்சும் இருக்கும். சொற்களை தடவியும், அழுத்தியும், மெல்ல ஒலித்தும், திடீரென உயர்த்தியும், சட்டென நிறுத்தியும் அவர் பேசுவது உண்மையில் ஒரு இசை கச்சேரியே தான். ஆங்கிலத்திலும் அதே போல பேசுவது தான் அதிசயத்திலும் அதிசயம்.

இலக்கணம் பிசகாத தமிழில் பேசிக்கொண்டிருக்கும்போதே, திடீரென இயல்பு நடைக்கு மாறுவார். அவர் பேசுவதற்காகவே எழுதி வைத்ததைப் போல, பாரதி, பாரதிதாசன், வள்ளுவர், ஆண்டாள் பாசுரம், கம்பனின் கவிதை வரிகளை, போகிற போக்கில் தன் பேச்சோடு லாவகமாக இணைப்பார்



மதுரையில் வடக்குமாசி வீதி – மேலமாசி வீதி சந்திப்பில், தெற்கு வாசல் அரசமரம் பிள்ளையார் கோவிலில் என, ஆண்டுக்கு இரண்டு மூன்று தடவை பட்டிமன்றங்கள் நடைபெறும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் நடுவராக இருப்பார். இரவு பத்து மணிக்கு தொடங்கும். இரண்டு சாலைகளும் ஆறுகளாகி, மனித வெள்ளம் அங்கு ஆர்ப்பரித்து நிற்கும்.

எத்தனை அறிவார்ந்த தலைப்புகள்! மார்க்சியம், வள்ளுவம், காந்தியம், ஜனநாயகம், சர்வாதிகாரம், பண்பாடு, புரட்சி, சமூக நீதி, விடுதலை என எல்லாவற்றையும் பிரித்து பிரித்து அரசியல் தத்துவக் கருத்துக்களை சாமானிய மக்களுக்கு புகட்டிய மாபெரும் பல்கலைக்கழகம் அது.

தலைப்பு எதுவாக இருந்தாலும், அதில் மார்க்சியத்தை பற்றி பேசும் அணியில் தோழர் தா.பா. தலைமையேற்று இருப்பார். தோழர்கள் கே. சுப்பராயன், ஐ.மாயாண்டி பாரதி, அறந்தை நாராயணன், எல்.ஜி.கீதானந்தன் என்று ஜொலிப்பார்கள். நெல்லை கண்ணன், விடுதலை விரும்பி, கோவை ராமநாதன் என்று அதனதன் அணியில் கற்றுத் துறைபோகிய வல்லுநர்கள் பேசுவார்கள்.

வாதங்களில் தீப்பறக்கும்; அர்த்தச் செறிவு இருக்கும்; கிண்டலும் கேலியும் நகைச்சுவையும் தெறிக்கும். ஆனால் ஒரு சொல் அவதூறு இருக்காது; வீண்பழி சுமத்த மாட்டார்கள். அடுத்த அணியின் மாட்சிமையை ஏற்பார்கள். இழிவு படுத்த மாட்டார்கள்.

கடைசியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தீர்ப்பு சொல்ல வருவார். ஒவ்வொரு அணியும் முன் வைத்த வாதங்களுக்கு எல்லாம் பதில் சொல்லி, கடைசியில் தீர்ப்புரைக்கும் போது, காலை ஐந்து மணியைத் தொடும். ஆறுகளாய் சாலைகளில் அமர்ந்திருந்த மனிதக் கூட்டம், தெருக்கள் வழியாக வெள்ளம் போல வடிவார்கள். கிழக்கு வெளுக்கத் தொடங்கும்.

அவரது பொதுக்கூட்டம், திருமங்கலம், செக்கானூரணி, கருமாத்தூர், மேலூர், கீழவளவு என எங்கு நடந்தாலும் போய் விடுவோம். போக வர 60லிருந்து நூறு கிலோ மீட்டர் கூட வந்துவிடும். சைக்கிள் தான் போக்குவரத்து சாதனம். இருக்கையில் ஒருவரும், கேரியரில் ஒருவருமாக இரண்டு பேரும் சேர்ந்து சைக்கிளை மிதித்து ஓட்டிச் சென்று திரும்புவோம்.

ஜனசக்தியில் 'கடைசிப்பக்கம்' தா.பா.கட்டுரை வரும். அதை எடுத்து வைத்துக்கொண்டு, அவரைப் போலவே ஏற்ற இறக்கங்களோடு சத்தம் போட்டுப் படிப்பது மிகவும் விருப்பமான வழக்கம்.

பட்டிமன்றம் முடிந்து, படிகளில் தோழர் தா.பா. இறங்கி வரும்போது, அவரை அப்படியே கட்டிப்பிடித்துக் கொஞ்ச வேண்டும் போல இருக்கும்.

பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்று, ஆங்கிலப் பேராசிரியராகி, வழக்கறிஞராக தொழில் புரிந்து, தகிக்கும் எழுத்தாளராகவும், தீப்பற்றும் பேச்சாளராகவும் விளங்கியவர். மற்றவர்கள் வாதத்துக்கு உரிய வகையில் குறி தவறாமல் பதிலடி கொடுப்பார். மறு தரப்பால் மடக்கவே முடியாத மாபெரும் 'டிபேட்டர்' அவர்.

அவருடைய சாதாரண மேடைப் பேச்சே ஒரு விவாதமாகத்தான் இருக்கும். கேள்விகளை அவரே முன்வைப்பார். அதற்கு பதில் சொல்லுவார். அந்த பதில்மீது அவரே சந்தேகம் எழுப்புவார்; பிறகு அதனை தீர்ப்பார்.

தா.பா. ஒரு கனவு மனிதர். மற்றவர்களுக்கு சாத்தியம் என்று புலப்படாத பல விஷயங்கள், அவருக்கு சாத்தியமாகத் தோன்றும். அதைப்பற்றி பலரிடமும் திரும்பத் திரும்ப பேசி, சாத்தியமற்ற எதையும் சாத்தியமானதுதான் எனக் கருதப்படும் சூழலை உருவாக்குவதில் வல்லவர்.

தோழர் தா. பா. மாநிலச் செயலாளரான பின்பு. "ஜனசக்தி" நீண்டகாலம் தாக்குப்பிடித்து நாளிதழாக வந்து கொண்டே இருந்தது.


பாலன் இல்லத்தை, ஒரு நெடிதுயர்ந்த மாளிகையாக கட்டியமைக்க வேண்டும் என்ற கனவும் தா.பா.வுக்குத் தான் வந்தது. அதில் முன்னும் பின்னுமாக பல கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. ஆனால் கடைசியில் பாலன் இல்லத்தை ஒரு எட்டடுக்கு மாளிகையாகக் கட்டி விட்டுத்தான் ஓய்ந்தார்.

அவரைப்போல தனது மனதுக்கு சரி என்று பட்டதை அப்படியே எழுதிவிடும் துணிவு எனக்கு வராது. எனவே நான் அவரைப் பற்றி இன்னும் சொல்ல நினைப்பவற்றை எழுத்தாக வடிக்க இயலவில்லை.

ஞானம் ஒளிவிடும் முகம், நிமிர்த்திய மார்பு, நடையே கம்பீரம், சொல்லே கட்டளை என்ற கம்பீரன் தா.பா. இந்த கம்பீரம் குறையும்போது பொதுவாக பலர் வெளியே வருவதற்கு விரும்பமாட்டார்கள்

ஆனால் தா.பா. அப்படிப்பட்டவர் அல்லர். அவரது கம்பீரம் வெறும் உடல் சார்ந்ததல்ல; சொல்லால், செயலால், சிந்தனையால் வந்தது.

அவர் ஒரு வெற்றிகரமான தொழிற்சங்கத் தலைவர். சம்பள உடன்பாடு பேசித் தீர்க்கக்கூடிய ஆண்டுகளில் எல்லாம், பல தொழிற்சாலைகளில் தோழர் தா.பா. வைத்தான் தலைவராக தேர்ந்தெடுப்பார்கள்.



ஏனென்றால் நிர்வாகத்தோடு இணக்கமாகவும் பேச வேண்டும்; தொழிலாளர்களின் கோரிக்கைகளை திறமையோடு வாதித்து, நிர்வாகத்தை ஏற்கச் செய்ய வேண்டும்; நிறைவாக உடன்பாட்டில் தொழிலாளர்களுக்கு அதிக நலன்களைப் பெற்றுத் தரவேண்டும்; மிக அதிகமாக இழுத்து பேச்சுவார்த்தை குலைந்து போகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பணி சாதாரணமானதல்ல. தோழர் தா.பா. இந்தப் பணிக்கு கச்சிதமாக பொருந்தியதால் தான், பல்வேறு தொழிற்சாலைகளில் இருந்து அவரை அழைத்து தமக்கு தொழிற்சங்க தலைவராக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

வயதானால் எல்லோரும் போக வேண்டியதுதான். அதுதான் இயற்கை காட்டும் பாதை. ஆனால் வரலாற்றின் வழியில், அற்புதமான மனிதர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தோன்றுவார்கள். அத்தகைய அற்புத மனிதர்களில் ஒருவர் தோழர் தா.பா.

அவர் எழுதிக் குவித்திருக்கிற நூல்கள் என்றென்றும் வாழும். கோபுரமாய் கட்டி யிருக்கிற பாலன் இல்லம் நீண்ட காலம் நிலைத்திருக்கும். இவற்றையெல்லாம் தாண்டி, தன்னை நேசித்த, தான் நேசித்த தோழர் ஒவ்வொருவரின் நெஞ் சங்களிலும் கூடுகட்டி தோழர் தா.பா. வாழ்ந்துகொண்டிருக்கிறார். இவை இருக்கும் வரை அவரும் இருப்பார்.

அவருக்கு ஏது மரணம்?

தொடர்புக்கு: 9444360869

## “காலா, என் காலருகே வாடா”



கொரோனா காலத்தில், எல்லோரும் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த போது, காரை எடுத்துக்கொண்டு, திருச்சி, மதுரை எனச் சென்று திரிந்தார்.

இடையிடையே காரை நிறுத்தி பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டிகள் வேறு. எல்லா ஊடகங்களுக்கும் போனார். அத்தனை ஊடகங்களும் அவரை வீடு தேடிப்போய், பேட்டி எடுத்தன.

இனி நடக்கவே முடியாது, சக்கர நாற்காலி தான் புகலிடம் என்றான பின்னும் அழைத்த ஊர்களுக்குச் சென்றார்; மேடையேறினார்; அமர்ந்த நிலையிலேயே பேசினார். "காலா, என் காலருகே வாடா" என்று சவால் விட்ட பாரதியின் புத்திரர் அவர்.

# போராடும் விவசாயிகள் மீது துணை இராணுவ ஒடுக்குமுறை



வ.மணிமாறன்

**விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி 'டெல்லி செல்வோம்' போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது காவல்துறை – துணை ராணுவ ஒடுக்குமுறையை ஒன்றிய மோடி அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ளது.**



202021 ஆம் ஆண்டில் டெல்லி புறநகரில் திரண்ட பல்லாயிரம் விவசாயிகள் ஓராண்டுக்கும் மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்த கார்ப்பரேட் சார்பு வேளாண் சட்டங்கள் மூன்றும் ரத்து செய்யப்பட்டன. போராட்டத்தை விவசாயிகள் திரும்பப்பெற்றனர்.

அப்போது, வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை சட்டப்படி உறுதி செய்யப்படும் என ஒன்றிய அரசு வாக்குறுதி கொடுத்தது. கோரிக்கைகள் சிலவற்றை நிறைவேற்றுவதாகவும் உறுதிமொழி அளித்தது. ஆனால், அவை நிறைவேற்றப்படவில்லை. சில மீறப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் மீண்டும் போராட்டக் களத்திற்கு வந்துள்ளனர்.

அனைத்து விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான (MSP) தனிச்சட்டம் இயற்றும் வாக்குறுதியை ஒன்றிய பாஜக அரசு நிறைவேற்ற வேண்டும் என்பது விவசாயிகள் கோரிக்கை.

ஆனால், மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் முயற்சி தடம் புரண்டு விடக்கூடாது என்பதில் பிரதமர் நரேந்திர மோடி கவனமாக செயல்பட்டு வருகிறார். இதற்காக பாஜக ஆளும் மாநில அரசுகளுடன் இணைந்து, விவசாயிகள் மீது அடக்குமுறைகளை ஏவிவிட்டுள்ளார். போராட்டக் களத்தில் விவசாயிகள் மீண்டும் அணிதிரண்டு விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கிறார்.

பிப்ரவரி 13 அன்று இவற்றையும் மீறி, டெல்லி செல்வோம் (டெல்லி சலோ) போராட்டத்தில் விவசாயிகள் அணி திரண்டனர். டிராக்டர்களில் டெல்லி நோக்கி புறப்பட்டனர். ஹரியானா மாநிலத்துக்குள் நுழைவதும், டெல்லியின் எல்லையை நோக்கிச் செல்வதும் விவசாயிகளுக்கு எளிதானதாக இல்லை. கடும் அடக்குமுறைகளைச் சந்தித்தனர்.

ஹரியானா மாநிலத்தின் பெரும்பகுதியில் 144 தடையாணை பிறப்பிக்கப்பட்டது. இது நான்கு அல்லது அதற்கும் மேற்பட்டோர் கூடும் அனைத்துக் கூட்டங்களையும் தடை செய்கிறது. மொபைல் மற்றும் இணைய சேவை துண்டிக்கப்பட்டது.

பஞ்சாப் விவசாயிகள் ஹரியானா எல்லையை அடைந்த போது, பெரிய கான்கிரீட் தடுப்புகள், முள் கம்பிகள், கொள்கலன்கள் (கன்டெய்னர்) போன்றவற்றால் ஏற்படுத்தப்பட்ட தடைகளை எதிர்கொண்டனர். விவசாயிகள் அணிவகுத்த டிராக்டர் மற்றும் வாகனங்களின் டயர்களை குத்திக் கிழிக்கும் ஆனிகளையும் சாலைகளில் நட்டு வைத்தனர். 50 ஆயிரம் போலீசார் குவிக்கப்பட்டனர். துணை ராணுவப் படையினரும் பணியில் ஈடுபட்டனர்.

அத்தனையையும் மீறி ஷம்பு எல்லையை விவசாயிகள் நெருங்கினர். துணை ராணுவப் படையினர் கண்ணீர் புகைக் குண்டுகள் மற்றும் ரப்பர் தோட்டாக்கள் மூலம் தாக்குதல் நடத்தினர். டிரோன்கள் கண்ணீர் புகைக்குண்டுகளை பொழிந்தன. இதில் ஏறத்தாழ 100 விவசாயிகள் படுகாயம் அடைந்தனர். இரண்டு பேருக்கு பார்வை பறிபோனது. 3 பேர் உயிரிழந்து விட்டனர்.

அதேநேரத்தில் "டெல்லி செல்வோம்" போராட்டத்தில் பங்கேற்பதற்காக சென்ற நூற்றுக்கணக்கான விவசாயிகள் பல்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டனர்.

டெல்லிக்குச் சென்று கொண்டிருந்த விவசாயிகளை மத்தியப்பிரதேச காவல் துறையினர் போபால் ரயில் நிலையத்தில் தடுத்து நிறுத்தினர். மத்தியப்பிரதேச விவசாயிகள் சங்கத் தலைவர்கள் இருவர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில், நொய்டா மற்றும் கிரேட்டர் நொய்டாவில் இருந்து டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்ற விவசாயிகள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.

கர்நாடகா மாநிலத்திலிருந்து டெல்லிக்கு சென்று கொண்டிருந்த விவசாயிகள் தொடர்வண்டிகளிலேயே கைது செய்யப்பட்டனர். பேரணிகள், கூட்டங்களில் பங்கேற்பதற்காக டிராக்டர்கள், டிரக்குகளில் மக்களை ஏற்றி வரக்கூடாது என டெல்லி காவல்துறை ஒரு மாதத்திற்கு தடை விதித்துள்ளது.

உலகுக்கு உணவு படைக்கும் விவசாயிகள் ஜனநாயக வழிகளில் போராடுவதற்கு இத்தனை கெடுபிடிகளா? அவர்கள் போராடுவது எந்தச் சட்டத்திற்கு எதிரானது? அரசியலமைப்பு சட்டம் அளித்துள்ள உரிமைகள் விவசாயிகளுக்கு இல்லையா? கோரிக்கைகளை எடுத்துச் சொல்லவும், அதற்காகத் திரண்டு போராடவும் ஜனநாயகம் இடமளிக்கிறதே. அவை எங்கு போயின? போராடும் விவசாயிகளை குற்றவாளிகளாக நடத்துவது எப்படி சரியாகும்?

ஓராண்டுக்கும் மேல் 2020 – 21 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் மாரடைப்பு, அதிக குளிர், கொரோனா தொற்று உள்ளிட்ட காரணங்களால் 700 க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழந்தனர்.

லக்கிம்பூர் கேரியில் ஒன்றிய அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஓட்டிச் சென்ற மகிழுந்து மோதி, போராடிக் கொண்டிருந்த விவசாயிகளில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

விவசாய சங்கத் தலைவர்கள் மீது ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. விவசாயிகளின் போராட்டத்துக்கு ஆதரவு அளித்த சமூக ஆர்வலர்கள் துன்புறுத்தப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கொடூரமான அடக்குமுறைகளை எதிர்கொண்டனர்.

இவற்றையெல்லாம் மீறி போராடிக் கொண்டிருந்த விவசாயிகளுக்கு தொழிலாளர்களும், நாடு முழுவதும் உள்ள கிராமப்புற உழைப்பாளர்களும் பெரும் ஆதரவு அளித்தனர். நடுத்தர மக்களிடம் அரசின் அடக்குமுறைக்கு எதிர்ப்பு வலுத்தது. இதனால் விவசாயிகளுடனான மோதல் அரசியல் ரீதியாக ஆபத்தானது என்பதை மோடி அரசு உணரத் தொடங்கியது. அதன் பிறகுதான் கார்ப்பரேட் ஆதரவு வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெற்றது.

தற்போது (2024 பிப்ரவரி 13) போராட்டம் தொடங்கும் முன்பே விவசாயிகள் மீது மோடி அரசும் பாஜக மாநில அரசுகளும் அடக்குமுறைகளை ஏவிவிட்டுள்ளன. விவசாயிகள் டெல்லி புறநகர் பகுதிகளுக்குக் கூட சென்றுவிடாமல் தடுப்பதுடன், போராட்டம் வலுவடையாமல் சிதைக்க ஒடுக்குமுறைகள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளன. இதனை உணர்ந்த மத்திய தொழிற்சங்கங்கள், விவசாய மற்றும் விவசாய தொழிலாளர் அமைப்புகள் பிப்ரவரி 16 அன்று, விவசாயிகளுக்கு ஆதரவாக நாடு தழுவிய போராட்டத்தில் வேலைநிறுத்தம் மறியல் ஈடுபட்டன.

அடக்குமுறைகளால் எவரும் அதிகாரத்தில் நீடித்த வரலாறு கிடையாது. அவர்கள் குப்பைக் கூடைகளில் வீசி எறியப்பட்டுள்ளனர். இந்திய பாசிஸ்டுகளுக்கும் இதுதான் கதி.

தொடர்புக்கு: 9500001224

## நான்காம் கட்ட பேச்சுவார்த்தையும் தோல்வி

சண்டிகரில் பிப்ரவரி 18 அன்று விவசாய சங்க பிரதிநிதிகளுடன் ஒன்றிய அமைச்சர்கள் நான்காம் கட்ட பேச்சுவார்த்தை நடத்தினர். ஒன்றிய அரசின் சார்பில் வேளாண் அமைச்சர் அர்ஜுன் முண்டா, வணிகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய் ஆகியோர் பங்கேற்றனர். பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் சிங் மானும் கலந்துகொண்டார்.

இதில், பருப்பு வகைகள், மக்காச்சோளம், பருத்தி ஆகியவற்றை ஐந்து ஆண்டுகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையில் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு, தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைக் கூட்டமைப்பு போன்ற கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் என ஒன்றிய அமைச்சர்கள் உறுதி அளித்தனர்.

இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு சாதகமானதாக இல்லை என்று கூறி விவசாய சங்கங்கள் நிராகரித்து விட்டன. இதனால் நான்காம் கட்ட பேச்சுவார்த்தையும் தோல்வி அடைந்தது.

more cartoons at www.cartoonistsatish.com




## விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கைகள்



- புதிய தொழிலாளர் சட்டங்களை (Labour Code) திரும்பப்பெற வேண்டும்.
- கட்டுமான தொழிலாளர்களுக்கும் மருத்துவ காப்பீடு வழங்க வேண்டும்
- புலம்பெயர் தொழிலாளர் நலனுக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட வேண்டும்.
- பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும்.
- அத்தியாவசிய பொருள்கள் மீதான ஜிஎஸ்டி வரியை நீக்க வேண்டும்.
- குறைந்தபட்ச ஊதியமாக மாதத்திற்கு ரூ. 26,000 அறிவிக்க வேண்டும்.
- வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமைகளுடன் சேர்க்க வேண்டும்.
- மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தை 200 நாட்களுக்கு நீட்டிக்க வேண்டும். ஒரு நாள் ஊதியமாக ரூ. 600 வழங்க வேண்டும்.

## விவசாயிகளின் கோரிக்கைகள்

- அனைத்து விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான தனிச்சட்டம்.
- எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும்.
- 2020–2021 ஆம் ஆண்டுகளில் போராடிய விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் ரத்து செய்யப்பட வேண்டும்.
- லக்கிம்பூர் கேரி வழக்கின் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.
- 2020 – 21 ஆம் ஆண்டுகளில் நடந்த போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.
- உயிரிழந்த விவசாயிகளுக்கு சிங்கு எல்லையில் நினைவிடம் அமைக்க வேண்டும்.
- புதிய மின்சார சட்டத்தின் படி ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தக் கூடாது. மின்கட்டணத்தை உயர்த்த கூடாது.
- மாசுக்கட்டுப்பாட்டு சட்டத்தில் விவசாயிகளை சேர்க்கக் கூடாது.
- விவசாயிகளுக்கு உடனடி கடன் தள்ளுபடி வழங்க வேண்டும்.
- 58 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்.

## ஓய்வு பெற்ற இஎஸ்ஐ காப்பீடுதாரர்களுக்கு மருத்துவ பலன்கள் நீட்டிப்பு




இஎஸ்ஐ கார்ப்பரேஷனின் 193வது கூட்டம் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கும் மருத்துவ உதவி மீட்பது குறித்து விவாதித்தது.

இஎஸ்ஐ காப்பீடுதாரராகவே ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு இப்போது மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது. மாதம் 21 ஆயிரம் ரூபாய்வரை ஊதியம் பெறுபவர் மட்டுமே இஎஸ்ஐ காப்பீடுதாரராக இருக்க முடியும்.

அந்த உச்சவரம்பைத் தாண்டி ஊதியம் உயர்ந்ததால், திட்டத்திலிருந்து விடுபட்டு, அதன் பிறகு ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கும் பொருந்தும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டுமே மருத்துவ திட்டம் விரிவுபடுத்தப்படும்.

01.04.2012க்குப் பிறகு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இஎஸ்ஐ காப்பீடு உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.

01.04.2017 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு/விருப்ப ஓய்வு பெற்று இருக்க வேண்டும்.

ஓய்வு பெறும் போது ரூபாய் 30 ஆயிரத்துக்கு மேற்படாமல் ஊதியம் பெற்றிருக்க வேண்டும்.

## நீதிபதியாக திருடன்



தானி ராம் மிட்டல் ஒரு பிரபல திருடன். அதே நேரத்தில் வழக்கறிஞர். டெல்லி, ஹரியானா, ராஜஸ்தான் பகுதிகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கார்களை இவர் திருடி இருக்கிறாராம்.

பொய்யான ஆவணங்களை தயாரித்து ஜஜ்ஜார் நீதிமன்றத்தின் கூடுதல் அமர்வு நீதிபதியை இரண்டு மாத விடுப்பு கொடுத்து அனுப்பிவிட்டு, அவரே நீதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். 2000 குற்றவாளிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கடைசியில் உண்மையைக் கண்டுபிடித்து அவரை கைது செய்ய வந்த போது, காணாமல் மறைந்து விட்டார். அவரால் விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளை திரும்ப சிறையில் அடைக்க அரசு தேடிக் கொண்டிருக்கிறது.

போலியாக அரசாங்க அலுவலகங்கள் நடத்துவது மட்டுமல்ல, ஒரு திருடன் நீதிபதியாகவே கூட பணியாற்ற முடியும். எவ்வளவு திறமையான நிர்வாகம்?!

## உலகில் மிக ஏழ்மையான நாடுகளில் ஒன்று இந்தியா

இந்தியா உலகப் பொருளாதாரத்தில் ஐந்தாவது இடத்திற்கு வந்து விட்டதாகவும், மூன்றாவது இடத்திற்கு கொண்டு செல்வது மோடியின் குவாரண்டி என்றும் பிஜேபி பேசுகிறது. ஆனால் நாட்டின் உள்நாட்டு உற்பத்தி குறியீட்டு எண் 3730 ஆக இருந்தபோதிலும், தனி நபருக்கு 2.61 தான் வருகிறது. விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டபோதிலும், உலகின் மிக ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக உள்ளது. பரவலான சமத்துவமின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. 10 சதவீத இந்தியர்கள் நாட்டின் செல்வத்தில் 57%ஐ வைத்துள்ளனர். இந்த 10% பேரை கழித்து விட்டுப் பார்த்தால் மிச்சம் உள்ள 90% பேருக்கு 2.61 அல்ல, 1க்கும் குறைவு. 90% பேரை மிதித்து நசுக்கி 10% பேரை பெருஞ்செல்வந்தர் ஆக்குவதுதான் மோடியின் பொருளாதார வளர்ச்சி!

அட்டவணை: **உலகப் பொருளாதார தர வரிசை-2024**

| தரம் | நாடு | ஜி.டி.பி. -பில்லியன் டாலரில் | தனி நபர் ஜிடிபி ஆயிரம் டாலரில் |
|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 26,954 | 80.41 |
| 2 | சீனா | 17,786 | 12.54 |
| 3 | ஜப்பான் | 4,231 | 33.95 |
| 4 | ஜெர்மனி | 4,430 | 52.82 |
| 5 | இந்தியா | 3,730 | 2.61 |
| 6 | இங்கிலாந்து | 3,332 | 48.91 |
| 7 | பிரான்ஸ் | 3,052 | 46.32 |
| 8 | இத்தாலி | 2,190 | 37.15 |
| 9 | பிரேசில் | 2,132 | 10.41 |
| 10 | கனடா | 2,122 | 53.25 |

# தமிழக அரசின் வேளாண் நிதிநிலை

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொது

2024 – 2025 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் தாக்கல் செய்துள்ளார்.

ஒன்றிய அரசின் உரிய நிதி பங்கீடுவராதபோதும்; ஒன்றிய அரசின்நிவாரணத் தொகை கொடுக்காத நிலையிலும் தமிழக அரசு நடப்பாண்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கிறோம்.

அனைத்து பயிர்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி இந்த பட்ஜெட் அமைந்துள்ளது வரவேற்கத்தக்கது.

மண்வளம்குன்றிவருவதால் வேளாண் உற்பத்தி குறைந்து வருவதுடன் விளையும் பொருட்களில் நச்சுத்தன்மையும் உயர்ந்து வருகிறது. இந்த நிலையில் மண்ணுயிர் காப்போம்; மண் வளம் கூட்டுவோம் என்ற திட்டத்தை அறிவித்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளது....

ஒரு கிராமம் ஒரு பயிர் என்றதிட்டம்15280 கிராமங்களில் செயல்படுத்துவது...

14000 ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள்...

நம்மாழ்வார்பெயரில் 5 லட்ச ரூபாயில் விருது...

10000விவசாயிகளுக்கு நிரந்தர மண்புழு உரத் தொட்டிகள் அமைப்பது..

கிராம வேளாண் உற்பத்தி குழுக்களுக்கு 2.48 கோடி...

பவர் டில்லர் மானியம் ரூ 85000 இல் இருந்து ஒரு லட்சமாக உயர்வு...

10வேளாண்விளைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற ஏற்பாடு...

வேக வைக்கும்இயந்திரங்கள்..உலர்இயந்திரங்கள் அமைக்கும் திட்டங்கள்..

வேளாண்மையை காத்திட 235 கிலோமீட்டர்



# ஓநாய்களின் கவலை

திமுக மற்றும் அதிமுக தலைமைகளுடன், கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு தொகுதி கிடைக்காமல் போனால் என்ன செய்வது? தினமணிக்கு கவலை வந்து, தில்லிக்கு ஓடோடி சென்று நிர்மலா சீதாராமனிடம் ஆலோசனை கேட்டிருக்கிறது. அவரும் அருள்பாலித்து அரும்பெரும் தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்.




அவரது தத்துவ முத்துக்கள் பின்வருமாறு:

- தேசம் வளர்ச்சி பாதையில் செல்கிறது என்பதற்கு வெள்ளை அறிக்கை கொடுத்திருக்கிறோம்
- தமிழ்நாட்டுக்கு 298.6% அளவுக்கு ஐமுகூ ஆட்சியை விட அதிக மானியம் தந்திருக்கிறோம்.
- குடும்பத்தின் கட்சி, ஆட்சி நடத்தக்கூடாது
- தமிழ்நாட்டின் பழங்குடி பெண் நீதிபதியாகி விட்டார்.
- ஜாதி மத பேதமற்ற சூழலை உருவாக்குவோம்
- தமிழ்நாட்டில் வழிபாட்டு உரிமை மறுக்கப்படுகிறது
- தேசிய கீதத்தை அவமதிக்கலாமா
- திராவிட மாடல் என்பது பிரிவினைவாதம்

காரணம் இல்லாமல் காரியம் இல்லை. கக்கிய சொற்களில், சிக்கிய விஷயங்கள் உண்மையோடு ஒட்டுகின்றனவா எனப் பார்க்க வேண்டியது நமது கடமை.

### வளர்ச்சிப் பாதையா?

உலகத்திலேயே அதிகமான ஏழைகளையும், மிக அதிகமான மகிழ்ச்சியற்றவர்களையும், மிக அதிகமான வேலையின்மையையும், மிக அதிகமாக மறுக்கப்படும் ஊடக சுதந்திரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் ஒரு நாடு, எப்படி வளர்ந்து விட்டதாகச் சொல்ல முடியும்?

அதானி, அம்பானி இத்யாதி கும்பல்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. அவர்களிடம் தேர்தல் பத்திரம் மூலம் பாஜக பணம் வாங்கி கல்லா கட்டியிருக்கிறது. அதுதான் உச்சநீதிமன்றம் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டதே!

### அதிக மானியம்:

2014 க்கு முந்தைய ஐமுகூ அரசோடு ஆர்எஸ்எஸ் பாஜக ஆட்சியை எப்படி ஒப்பிட முடியும்? மாநில அரசுக்கு வருவாய் ஏதும் வரவிடாமல், வழித்து எடுத்துக் கொண்டு செல்லும் ஜிஎஸ்டி வரி ஐமுகூ ஆட்சியில் இல்லையே!

தமிழ்நாட்டில்வசூலித்ததைவிட கிட்டத்தட்ட மூன்று மடங்கு கூடுதலாக ஒன்றிய அரசு கொடுக்கிறதாம். காதில் பூ வைக்கலாம். ஆனால் இப்படி சரம்சரமாகவா சுற்றுவது!

மாநிலங்களுக்கு தந்துள்ள நிதிப் பகிர்வு வெட்ட வெளிச்சமாகி இருக்கிறது. தமிழ்நாட்டில் இருந்து ஒரு ரூபாய் வசூலித்தால் 29 பைசாதான் ஒன்றிய அரசு தருகிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஏதோ திமுக கூறுவதாக கயிறு திரிக்கிறார்கள்.

### குடும்பத்தின் ஆட்சி:

பாஜகாவிலேயே ஏராளமான வாரிசுகள் அமைச்சர்களாக தொடர்வது ஒரு பக்கம் இருக்கட்டும். நேரு, சாஸ்திரி குடும்ப வாரிசுகளையும் பாஜகவுக்கு இழுத்தது ஏன்? போதாது என்று பவார், பட்நாயக் குடும்பங்களுக்கு இன்னும் வலை வீசுவது ஏன்?

### பழங்குடி நீதிபதி:

தமிழ்நாட்டில் இருந்து பழங்குடி பெண் நீதிபதியாகி விட்டாராம். இதில் ஒன்றிய அரசின் பங்கு என்ன? ஜனாதிபதி முர்மு பழங்குடி இனப்பெண் என்பதால்தானே நாடாளுமன்றம், ராமர் கோவில் திறப்பு விழாக்களுக்கு அரசு அழைக்கவில்லை.

மணிப்பூரில் ஆடை களைந்து இழுத்து வரப்பட்டவர்களும் பழங்குடி பெண்கள் தானே!

2000 ஆண்டுகளாக வேளாண் குடிகளான மெய்தி இனத்தவரை, பழங்குடி என அறிவித்து உண்மையான பழங்குடிகளின் நிலத்தையும் வாழ்வையும் அழிக்க எத்தனை சதிகள்? எவ்வளவு வன்முறைகள்?

# லை அறிக்கையை வரவேற்கிறோம்

## செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி அறிக்கை

மின்வேலிஅமைப்பது ...

என்ற புதிய திட்டங்களை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்கிறது.

ஆனால் வேளாண் அறிக்கைக்கான முன் மொழிவு கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் சிலவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.



குறிப்பாக இயற்கை இடர்பாட்டில் 33 சதம் கீழான மகசூல் இழப்பிற்கும் நிவாரணம் வழங்கிடும் கொள்கையை உருவாக்கிட வேண்டும்.


நெல் குவிண்டால ரூபாய் 2500; கரும்பு டன் 4000 என்ற வாக்குறுதி நான்காம் ஆண்டிலும் நிறைவேற்ற வேண்டும்.

சிலமாநிலங்கள் வழங்குவது போல் சாகுபடியாளர்களுக்கு வேளாண் உற்பத்தி ஊக்க மானிய தொகைஅறிவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் கூடுதல் பரப்பளவில் சாகுபடியாகும் தென்னை விவசாயத்தை காத்திட இறக்குமதி எண்ணெய் வகைகளை குறைத்து தேங்காய் எண்ணெய்; தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருட்கள் விநியோகத்தை அதிகரித்திட வேண்டும் என்பது போன்ற திட்டங்கள்....

வெங்காயத்திற்கு ஏற்றுமதிக்கான தனி புவிகுறியீட்டு எண்பெறுவது, தொடர் பேரிடர் பாதிப்பு பகுதிகளை காக்க அதிநவீன வான் ஆராய்ச்சி கருவிகள் அமைப்பது, காவிரி உபரி நீர் இணைப்பு திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு போன்ற திட்டங்கள் இல்லை.

இவைகளை மறு ஆய்வு செய்து நிறைவு அறிக்கையில் இணைத்திட கேட்டுக் கொள்கிறோம்.




எத்தனை படுகொலை? எவ்வளவு பொருட்சேதம்? பத்து மாதங்களாக கைகட்டி வாய்பொத்தி வேடிக்கை பார்க்கிற பாஜகவுக்கு பழங்குடி பற்றி பேசுவதற்கு தகுதி இருக்கிறதா?

### சாதி மத பேதமற்ற சூழல்:

அட கண்றாவியே! யார், எதைப் பேசுவது!! அக்பர் என்ற ஆண் சிங்கத்தையும் சீதா என்ற பெண் சிங்கத்தையும் ஒரே இடத்தில் வைக்க கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிற நீங்களா இப்படி பேசுவது!

“கோவில் உண்டியலில் காசு போடாதீங்க, அர்ச்சகர் தட்டில் போடுங்கள்” என்று பொத்துக் கொண்டு வந்ததே சாதிப் பாசம். நீங்கள் பேசியதை வீடியோவிலேயே பார்த்தோமே மாமி!

### தமிழ்நாட்டில் வழிபாட்டு உரிமை இல்லை?!

டெல்லியிலேயே இருந்தால் எப்படித் தெரியும். மதுரை சித்திரைத் திருவிழா, திருச்செந்தூர் சூரசம்ஹாரம், வேளாங்கண்ணி வழிபாடு என்று போய்ப் பாருங்கள், லட்சோப லட்சம் பேர் இணங்கி வழிபடுவதை!

கோவில் திருவிழாவுக்கு முஸ்லிம்கள் பரிசுப் பொருள் கொண்டு தருவதையும், மசூதி திறப்புக்கு இந்துக்கள் சீர் கொண்டு செல்வதையும் கண்ணாரப் பார்த்தால், உங்கள் கும்பலுக்கு டன் கணக்கில் ‘ஜெலூசில்’ தேவைப்படும்.

ஒருவேளை, ‘வழிபாடு என்றாலே கலவரம்’ என்ற உங்களின் அகராதி இங்கு எடுபடாததால் கோபம் வருகிறதோ!

### தேசிய கீதத்தை அவமதிப்பதா?

தேசிய கீதம் இசைக்கப்படும் முன்பே அவையை விட்டு ஓடிய ஆளுநர் ரவியிடம் அல்லவா இதைக் கேட்டிருக்க வேண்டும்?

அரசு நிகழ்ச்சிக்கு முன்பாக தமிழ்த்தாய் வாழ்த்தும் இறுதியில் தேசிய கீதம் பாடுவது தமிழ்நாட்டின் மரபு.

ஆளுநர் வளாகத்துக்கு வரும்போது தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. சட்டப்பேரவை முடியும் போதும் இசைக்கப்படுகிறது. அவை துவங்கும் போதும் அதைத்தான் இசைக்க வேண்டும் என்றால்? சுற்றி வளைத்து நீங்கள் சொல்லுவது என்ன, தமிழ் தாய் வாழ்த்து பாடக்கூடாது என்றுதானே!

நிதியமைச்சர் தமிழ்நாட்டில் பிறந்து, டெல்லியில் கல்வி கற்று, தெலுங்கானாக்காரரை மணந்து அவரை ஹைதராபாத்தில் விட்டு விட்டு, கர்நாடகாவில் குடியேறி, ஆந்திராவில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வாகிறவர்.

இங்கே பிறந்து, வளர்ந்து, செத்துப் போகிற நாங்கள், தேசிய கீதத்தோடு, தமிழ்தாயையும் கொண்டாடுகிறோம். ஏன் எரிகிறது இவர்களுக்கு?

தமிழ் மொழி, தமிழ் மரபு, தமிழர் வாழ்வியல் முறை அனைத்துக்கும் பங்கம் விளைவிப்பதில் பங்கேற்பேன் என்று உறுதிமொழி ஏற்றுத்தான் இவர்கள் பாஜகவில் சேருவார்களோ!

### பிரிவினைவாதம்:

மாநில உரிமைகளைப் பேசினாலே அதை பிரிவினைவாதம் என்று முத்திரை குத்துவது, சர்வாதிகாரத்தின் உச்சியை நோக்கி பாஜக பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதன் அடையாளம்.

பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை, அமைப்பாகக் கூடும் உரிமை ஆகியவற்றை முற்றாக மறுப்பது; அவற்றை அனுமதித்தால் தேசத்தின் பாதுகாப்பு அபாயத்துக்குள்ளாகும் என்று பூச்சாண்டி காட்டுவது; வாய் திறந்தால் ஊபாச் சட்டம், அமலாக்கத்துறை, வருவாய்வரித்துறை ஆகியவற்றை கட்டவிழ்த்து விடுவது, வருடக் கணக்கில் விசாரணையே இல்லாமல் சிறையில் அடைப்பது ஆகியவை தான் தேசியவாதம் என்றால் அது பாசிஸ்டுகளின் தேசியவாதம். ஜனநாயகத்தின் தேசியம் அல்ல.

தேச ஒற்றுமை. தேசிய நலன்கள் என்பதை மாநில உரிமைகளையும் மனித உரிமைகளையும் மறுப்பதற்கும் பயன்படுத்துவதை நாட்டை நேசிக்கும் இந்தியக் குடிமகன் ஒரு போதும் ஒத்துக் கொள்ள மாட்டான்.

*கூட்டணிகளைக் கலைத்து, சீந்துவார் இல்லாத பாஜகவுக்கு துணையாக கட்சிகளைப் பிடிக்கும் நப்பாசை நிறைவேற, தமிழ்நாடு இடம் கொடுக்காது.*

*ஆடுகள் நனைந்து விட்டால் என்ன செய்வது என்று ஓநாய்கள் கவலை கொள்ள வேண்டியது இல்லை.*

**– டி.எம்.மூர்த்தி**

# தெலுங்கானா போராட்டத்துக்கு மதவெறிச் சாயமா?!

**◆ டாக்டர் கே நாராயணா**

*சத்ரபதி சிவாஜியின் 396 வது பிறந்த நாளையொட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தெலுங்கானா மாநில தலைமையகமான, ஹைதராபாத் மக்தூம் பவனில் படக் கண்காட்சி நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே நாராயணா பங்கேற்றுப் பேசினார்.*

*சிவாஜியின் பிறந்த நாள் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது சிவாஜி ஒரு சூத்திரர் என்பதால், அவர் மன்னராக பதவி ஏற்க தகுதியற்றவர் என்று தான் அன்றைய புரோகிதர்கள் சொன்னார்கள்.*

*அவர் தலித்துகள் மற்றும் விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதில் முன்நின்றவர். அவர் ஒருபோதும் முஸ்லிம்களுக்கு எதிரானவர் அல்ல. அவரது பெரிய சேனையில், 30 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் முஸ்லிம்களே ஆவர். அவரது அரசாங்கத்தில் முஸ்லிம்கள் பல பொறுப்பான பதவிகளில் இருந்தார்கள்.*

*இது பற்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் கோவிந்த் பான்சரே, ஒரு புத்தகம் எழுதினார். அது 22 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, 40 லட்சத்திற்கும் அதிகமான பிரதிகள் விற்றுள்ளன. அந்த புத்தகத்தை வெளியிடக் கூடாது என்று ஆர்எஸ்எஸ் அவரை எச்சரித்தது.*

*ஆனால், வெளியிட்டார். அதனால் ஆர்எஸ்எஸ் பரிவாரத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.*

*சிவாஜி தனது ஆட்சி காலத்தில் கல்வி, உடல் நலம், விவசாயிகள் நலன் ஆகியவற்றில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். விவசாயிகளைத் தனது அரண்மனைக்கு வரவழைத்து, அவர்களுடைய குறைகளையும் பிரச்சனைகளையும் பேசி தீர்ப்பதில் கவனம் செலுத்தினார். ஜமீன்தார் முறைமைகளை மாற்றி வருவாய்த்துறையை சீர்படுத்தினார்.*

*ஆனால் மோடியோ விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களை கொண்டு வந்தார். அதை எதிர்த்து உறுதி*




*குலையாத போராட்டங்களை விவசாயிகள் நடத்தினார்கள். வேறு வழியின்றி அந்த சட்டங்களை மோடி திரும்ப பெற்றார். ஆனாலும் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிப்பதாக மோடி அளித்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.*

*எனவே தான் இன்று டெல்லியை சுற்றிச் சூழ்ந்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மோடி அரசு, அவர்கள் மீது தடியடி நடத்துகிறது. சாலைகளில் ஆணிகளை மட்டுமின்றி கடப்பாரைகளையே பதித்திருக்கிறது. ரப்பர் குண்டுகளால் சுடுகிறது. கண்ணீர் புகைக் குண்டுகளை எறிகிறது. அந்தக் குண்டுகளை விவசாயிகள் தலை மீது போடட்ரோன்களைப் பயன்படுத்துகிறது. இந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் ஏராளமான விவசாயிகள் படுகாயமடைந்துள்ளனர். கண்பார்வை இழந்திருக்கின்றனர்.*

*விவசாயிகள் போராட்டத்தை எதிர்கொள்ள காவல் துறை போதாது என்று ராணுவத்தை மோடி அரசு இறக்கி இருக்கிறது.*

*சிவாஜியை உத்வேகமாகக் கொண்டு, கார்ப்பரேட் ஆதரவு மோடி அரசாங்கத்தை எதிர்த்து போராடுவது விவசாயிகள் தொழிலாளர்களுடைய கடமை. ஒட்டுமொத்த சமூகத்திற்கும் உணவளிக்கிற விவசாயிகளைப் பாதுகாப்பது ஜனநாயகவாதிகளின் மக்களின் கடமையாகும்*

*சுதந்திரப் போராட்டத்தில் எந்தப் பங்கும் வகிக்காத பிஜேபியின் மோடி அரசு, பட்டேல் சிலையை நிர்மாணித்திருக்கிறது. பிஜேபியும் ஆர்எஸ்எஸ்ஸும், வீரம் செறிந்த, புகழ்மிக்க தெலுங்கானா ஆயுதமேந்திய போராட்டத்தையே திரிக்கிறார்கள். வரலாற்றைச் சிதைக்கிறார்கள். அது ஒரு முஸ்லிம் மன்னரை எதிர்த்த இந்து மக்களின் போராட்டம் என்று கூறுகிறார்கள்; வகுப்புவாத வண்ணம் பூசுகிறார்கள்.*

*தெலுங்கானா ஆயுதப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த மூன்று முக்கிய தலைவர்களில் மக்தூம் மொக்தீனும் ஒருவர். அவர் ஒரு முஸ்லிம். அந்தப் போராட்டத்தில் முதலில் ரத்தம் சிந்தி தியாகியான பண்டகி ஒரு முஸ்லீம். இதை எவ்வாறு முஸ்லிம் மன்னருக்கு எதிரான இந்துக்கள் போராட்டம் என்று பேச முடியும்?*

*பல்வேறு பண்பாடுகள், மதங்கள், மரபுகள் நிறைந்த இந்த ஜனநாயக நாட்டில் பெரும்பான்மை ஆதிக்கத்தை போதிக்கிறது. தற்போதைய அரசியலமைப்பை சிதைத்து, அதன் இடத்தில் மனுஸ்மிருதியை வைப்பதே அவர்களுடைய இலக்கு.*

*அவர்கள் ஒரே நாடு எனும் பெயரில் சர்வாதிகாரத்தையும் பாசிசத்தையும் இங்கு நிறுவுவதற்கு முயற்சிக்கிறார்கள். இந்தப் பாசிச சக்திகளை என்ன விலை கொடுத்தும் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும் என்று இந்த சிவாஜி பிறந்தநாளில் உறுதி ஏற்போம்.*

*இவ்வாறு டாக்டர் கே நாராயணா பேசினார்.*

**சுருக்கி, தமிழில். டிஎம்**

# சுருக்.. நறுக்..

## தமிழ்நாடு வரவு செலவு அறிக்கை

### டாக்டர்கள் சங்கம் வரவேற்பு

# மதி இறுக்கம் (Autism) உடையோருக்கு ரூ.25 கோடியில் உயர்திறன் மையம் தொடங்கப்படும்.

# 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தின் கீழ், விபத்து நடந்த முதல் 48 மணி நேரத்தில் வழங்கப்படும் இலவச சிகிச்சைக்கான உச்சவரம்புத் தொகை 1 லட்சம் ரூபாயில் இருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

#சுகாதார மையங்கள் முதல் மருத்துவக் கல்லூரிகள் வரை கட்டமைப்புகளை தரம் உயர்த்த ரூ.333 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

# 25 அரசு மருத்துவமனைகளில் போதை பழக்கத்திலிருந்து மீள்வதற்கான சிகிச்சை மையங்கள் ரூ 20 கோடி செலவில் அமைக்கப்படும்.

# சென்னை அரசு பல்மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரூ 64 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

# மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ரூ 20,198 கோடி ஒதுக்கியிருப்பது.

போன்றவை வரவேற்புக்குரியது.

# நீண்ட காலமாக ஒப்பந்த அடிப்படையில்,தற்காலிக அடிப்படையில் பணிபுரியும்,செவிலியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள், ஸிஃஷிரி மருந்தாளுநர்கள் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்களின் பணி நிரந்தரம், அரசு மருத்துவர்களின் ஊதிய உயர்வு அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது.

அரசு மருத்துவமனைகளில் அனைத்து சிகிச்சைகளும், மருத்துவப் பரிசோதனைகளும் முற்றிலும் இலவசம் என்ற நிலையை உருவாக்க தமிழ்நாடு அரசு முயலவேண்டும்.

### சிறு, குறு தொழில் முனைவோர் சங்கம் வரவேற்பு

பட்ஜெட் திட்டங்களுக்கு தமிழ்நாடு கைத் தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர் சங்கம் வரவேற்பு

தஞ்சை மாவட்டம் செங்கிப் பட்டியில் ரூ 120 கோடியில் சிப்காட் தொழிற்பேட்டை கரூர், ஈரோடு, விருதுநகர் மாவட்டங்களில் ரூ.20 கோடி செலவில் மினிஜவுளி பூங்காக்கள், கைவினைப்பொருள்கள், கைத்தறி பொருள்கள் விற்பனைக்கென ரூ.227 கோடி செலவில் வர்த்தக வளாகம் அமைக்க திட்டம், உலக புதுத் தொழில்கள் உச்சிமாநாடு தமிழகத்தில் நடத்த திட்டம் ஆகிய அறிவிப்புகளை வரவேற்கிறோம்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆய்வுகளில் குறுந்தொழில்களை மேம்படுத்த என்ன செய்ய வேண்டும் என்ற ஆய்வும் இடம் பெற வெண்டும்.

கோவை குறிச்சியில் ரூ.37 கோடி செலவில் 4 அடுக்குமாடி தொழிற்கூடம் குறுந்தொழில்களுக்கென அமைப்பதை வரவேற்கிறோம். மதுரை சக்கிமங்கலத்தில் 3 அடுக்குமாடி தொழிற்கூடங்கள் ரூ.118 கோடியில் எம் எஸ் எம் இபிரிவுக்கென அமைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவை குறுந்தொழில் நிறுவனங்களால் வாங்கக் கூடியவிலையில் அமைய வேண்டும்.

ஒட்டன்சத்திரம், மானாமதுரை, திருத்துறைப் பூண்டி ஆகிய 3 இடங்களில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைப்பதை வரவேற்கிறோம்.

மின்கட்டண உயர்வு, மூலப்பொருள்கள் விலை உயர்வு, வெள்ளப்பாதிப்புகளினால் நசுங்கி நலிவடைந்துவிட்ட குறுந்தொழில்களைக் காக்கவும் மீட்கவும் எந்தத் திட்டமும் பட்ஜெட்டில் இல்லை என்பது வருத்தமளிக்கிறது.

குறுந்தொழில்கள்சார்பில்வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்க விரிவான பட்டியலை டாக்ட் சங்கம் நிதியமைச்சருக்கும் தமிழக முதல்வருக்கும் அனுப்பிஉள்ளது. பட்ஜெட் மீதான விவாதத்துக்குப் பதில் அளிக்கும் பொழுது எங்கள் கோரிக்கைப் பட்டியலில் உள்ள கோரிக்கைகளையும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்க பணிவன்புடன் கோருகிறேன்.

## பஞ்சு மிட்டாய் விற்பனைக்குத் தடை!



கண்கவரும் வண்ணங்களில் பஞ்சு மிட்டாய்களும் நிறமூட்டப்பட்ட மிட்டாய்களும் எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் பெரும் ஆபத்தை விளைவிக்கும் வேதிப்பொருட்கள் சேர்க்கப்படுவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கையில், "பஞ்சு மிட்டாய் மற்றும் நிறமூட்டப்பட்ட மிட்டாய் வகைகளை அரசு உணவு பகுப்பாய்வு கூடத்தில் ஆய்வு செய்ததில் ரோடமைன் – பி (Rhodamine-B) எனப்படும் செயற்கை நிறமூட்டி வேதிப்பொருள் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது தரம் குறைந்த, பாதுகாப்பற்ற உணவு என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, உணவு பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006ன் படி, ரோடமைன் பி எனப்படும் செயற்கை நிறமூட்டியைக் கொண்டு உணவுப் பொருட்கள் தயாரித்தல், விற்பனை செய்தல், பரிமாறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்" என்று கூறியுள்ளார்.

"ஜவுளி உற்பத்தித் துறையில் சாயத் தொழிலுக்கு இந்த ரோடமைன் பி பயன்படுத்தப்படுகிறது. குறைந்த செலவில் மக்கள் மனம் கவரும் வண்ணத்தைக் கொடுப்பதால் பஞ்சு மிட்டாய்க்கு பயன்படுத்துகின்றனர். இதுபோன்ற நச்சு வண்ணங்கள் நம் உடலில் இருந்து வெளியேற 45 நாட்கள் ஆகும். அவை உடலில் தங்கி சிறுநீரகம், கல்லீரல், நரம்பு மண்டலம், மூளை போன்றவற்றைப் பாதிக்கும். உடல் செல்களில் உள்ள மரபணுக்களை சிதைக்கும் திறன் உடையவை. அதனால் இவற்றைப் பயன்படுத்தக் கூடாது" என்று உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி சதீஷ்குமார் கூறினார்.

புற்றுநோயை உண்டாக்கும் வேதிப்பொருட்கள் இருப்பதால், பஞ்சு மிட்டாய் விற்பனைக்கு தமிழ்நாடு அரசு தடை விதித்துள்ளது.

லாபத்துக்காக மக்கள் நலத்துடன் விளையாடாதீங்க!

## எந்தக் கேள்விக்கும் பதிலளிக்காத பிரதமர்!

17வது மக்களவையின் பதவிக்காலம் முடிவடையப் போகிறது. இந்த ஐந்து ஆண்டுகளில் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை. ஒரே ஒரு கேள்விக்கு, அதுவும் எழுத்து மூலம் மட்டும் அவர் பதிலளித்திருக்கிறார்.

2014 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று, நாடாளுமன்றத்தின் படிகளில் காலெடுத்து வைக்கும் முன், நெடுஞ் சான் கிடையாக விழுந்து வணங்கினார். 'இந்திய ஜனநாயகத்துக்கு நரேந்திர மோடி எப்படி மரியாதை அளிக்கிறார்' என்பதைப் பாருங்கள் என்று சங்கிகள் புல்லரித்தனர். நாடாளுமன்ற கூட்டங்களில் கலந்துகொண்டும், கேள்விகளுக்குப் பதிலளித்தும் வந்த மன்மோகன் சிங்கிற்கு மவுன மோகன் என்று பட்டப்பெயர் கொடுத்த மோடி, 'எவ்வளவு நீளத்துக்குப் பேசுவார் பாருங்கள்' என்று சங்கிகள் அளந்துவிட்டனர்.

அவரும் நாடாளுமன்றத்தில் நீண்ட உரைகளை ஆற்றினார். ஆனால் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கவில்லை.

ஆட்சியில் இருந்த 10 ஆண்டுகளும் செய்தியாளர் சந்திப்புகளையே தவிர்த்து விட்டார். அந்த வரிசையில் மக்களவையும் சேர்ந்துவிட்டது. "நீங்கள் கேட்பதற்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டுமா?" என்ற மனப்பான்மை தான் இதற்கு காரணம்.


இதற்குப் பெயர் தானே பாசிசம்.



## மோடியின் படத்தை அச்சிட ரூ.13 கோடி

தமிழ்நாட்டு நியாயவிலைக் கடைகளில் இலவச அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கொரோனா பொதுமுடக்க காலத்தில், ஏழை எளிய மக்களுக்கு இலவச உணவு, தானியங்கள் வழங்கும் திட்டத்தை கரீப் கல்யாண் யோஜனா என்ற பெயரில் ஒன்றிய பாஜக அரசு கொண்டுவந்தது. இந்தத் திட்டம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது.

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் இந்த இலவசப் பொருட்கள் தற்போது மோடியின் படம் அச்சிடப்பட்ட பைகளில் கொடுக்கப்படுகிறது. இதற்காக இந்திய உணவுக்கழகம்(FCI) மண்டல அலுவலகங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. இதன்படி ராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் மோடியின் படம் அச்சிடப்பட்ட பைகளுக்காக 13.3 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதுவரை ஒரு கோடிக்கும் மேற்பட்ட பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் (ஆர்டிஐ) வெளியுலகுக்கு தெரியவந்துள்ளது. இதேபோன்று எத்தனை மாநிலங்களில், எத்தனை கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்பதை தெரியவில்லை.



சுயமோகிகளுக்கு எதைப் பற்றித்தான் கவலை.

## பாஜகவின் தமிழ்க் காதல் பகல் வேடமே!

நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி செல்லும் இடமெல்லாம் திருக்குறள் பற்றியும், தமிழின் பெருமை பற்றியும் பேசுகிறார். அவருடைய தமிழ்ப் பாசத்தை புரிந்துகொண்டு ஆதரிக்க வேண்டும் என பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தி வருகிறார். பாஜகவின் தமிழ்க் காதல் புல்லரிக்க வைத்தது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்த ஆண்டு கூட்டத்தொடரை தொடங்கிவைத்து உரையாற்றிய ஆளுநர் ஆர்.என்.ரவி, "ஆளுநர் உரை தொடங்கும்போது தமிழ்த்தாய்வாழ்த்து பாடக் கூடாது. தொடங்கும் போதும், முடிவடையும் போதும் தேசியகீதம்தான் பாட வேண்டும். அறிவுறுத்தியும் தமிழ்நாடு அரசு ஏற்கவில்லை" என்று ஆத்திரமடைகிறார். தமிழின் மீது காதல் கொண்ட பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலையும் ஆளுநர் ஆர்.என்.ரவி சொன்னதை ஏன் நிறைவேற்றவில்லை என சாடுகிறார். நிர்மலா சீத்தாராமன் அம்மையார் பிரிவினை வாதம் என்று சாடுகிறார்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு இவற்றின் தனித்தன்மைக்கான சின்னஞ்சிறு குறியீடுகளைக்கூட சகித்துக்கொள்ள முடியாத கட்சி தான் பாஜக என்பதை மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறார் ஆளுநர்.

அட, பாஜகவின் தமிழ்க் காதல் இவ்வளவுதானா? கொண்டை தெரியாத மாதிரி வேஷம்போட வேண்டாமா?



# தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை - வேளாண் அறிக்கை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

## தடைகளை தாண்டி சாதனை படைக்கும் நிதி நிலை அறிக்கை

தமிழ்நாடு அரசின் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு 2024 – 25 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, 19.02.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்துள்ளார்.

தமிழ் சமூகத்தின் தொன்மை நல் மரபுகளை முன்னெடுத்து வளர்த்தெடுக்க நிதி நிலை அறிக்கை கவனம் செலுத்தி இருக்கிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை உட்பட தமிழ் இலக்கியங்கள் பிற மொழிகளில் பெயர்த்து வழங்கவும், தொல்லியல் ஆய்வுகளை மேலும் ஆறு மையங்களுக்கு விரிவுபடுத்தியிருப்பதும், கீழடியில் திறந்த வெளி அரங்கம் அமைக்கும் திட்டம் மற்றும் பழங்குடி மக்கள் மொழிகளை ஆவணப்படுத்தும் திட்டம் போன்றவை சிறப்பானது.

குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, நீர்வளத்துறையில் 5 ஆயிரம் ஏரிகள், குளங்கள் உட்பட காவிரி, வைகை, நொய்யல், தாமிரபரணி ஆறுகளும் புனரமைக்கும் திட்டமும், 2 ஆயிரம் மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டமும் முக்கியமானது.

இடை பாலினத்தவர்களுக்கு கல்வி, விடுதி இலவசமாக வழங்குவதும், கல்லூரி கல்வி செலவை அரசே ஏற்பதும் அவர்களின் சமூக ஒப்புதலுக்கு வழிவகுக்கும். மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்கு ரூ.13 ஆயிரத்து 720 கோடியும், மாணவர்கள் கல்விக் கடன் வழங்குவதும் உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு மாதம் ரூ 1000 அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தும் தமிழ் புதல்வன் திட்டமும் வரவேற்கத்தக்கது.

ஒன்றிய அரசு கட்டமைப்பில் தமிழர் பங்கேற்பு அதிகரிக்க சிறப்பு பயிற்சி மையங்கள் அமைப்பது குறிப்பிடத்தக்கது. 500 க்கும் மேற்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள் பணியமர்த்தும் நிறுவனங்களுக்கு ஊதிய மானியம் அளிப்பது வரவேற்பு பெறும். இதில் 500 பேர் பணியமர்வு என்ற வரம்பை தளர்த்தி, குறைப்பது அவசியமாகும். பள்ளிக் கல்வித்துறைக்கு பெரும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையில் பத்தாண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வரும் பகுதி நேர ஆசிரியர் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்,

பொதுப் போக்குவரத்துப் பயணிகள் வசதிக்காக மூன்றாயிரம் புதிய பேருந்துகள் வாங்க கவனம் செலுத்தியுள்ள நிதி நிலை அறிக்கை, போக்குவரத்துத் தொழிலாளர்களின் சட்டப்பூர்வ உரிமைகளை பாதுகாத்து, அவர்களுக்கு வழங்க வேண்டிய பணப் பயன்களை வழங்கவும் முன் வரும் என எதிர்பார்ப்பு இருக்கிறது. சென்னை பெருநகரில் நிலவும் போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வு காணும் முறையில் மெட்ரோரயில் பாதை விரிவாக்கம் செய்வது பொருத்தமானது.

தீவிரமாக நகர்மயமாகி வரும் நிலையில் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு மேலும் கூடுதலாக நிதித் தேவை உருவாகும். குடிசைகள் இல்லா தமிழ்நாடு முத்தமிழறிஞர் கலைஞரின் நீண்ட காலக் கனவாகும். அதனை நனவாக்கும் முயற்சியில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நிதிப் பற்றாக்குறை ரூபாய் ஒரு லட்சத்து 8 ஆயிரம் கோடியாக உயர்ந்திருப்பதாக கூறியுள்ளார்.

வரும் ஆண்டுகளில் 50 ஆயிரம் பேருக்கு அரசு பணி வழங்கப்படும் என உறுதியளித்துள்ள நிதிநிலை அறிக்கை அரசுத்துறைகளிலும், நிறுவனங்களிலும் பத்தாண்டுகளுக்கும் மேலான ஒப்பந்த தொகுப்பூதிய பணியாளர்கள் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஆசிரியர், அரசுப் பணியாளர் பழைய ஓய்வூதியம் போன்றவை இன்னும் எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையிலேயே நீடிக்கிறது.

மொத்தத்தில் தமிழ்நாடு முழுவதும் சமச்சீர் வளர்ச்சி பெற வேண்டும் என்ற சமூக நீதி கண்ணோட்டம் கொண்ட நிதி நிலை அறிக்கை தடைகள் பலவற்றையும் தாண்டி சாதனை படைக்கும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஆக்கபூர்வமான வேளாண் நிதி நிலை அறிக்கை

தமிழ்நாடு அரசு வேளாண் துறைக்கான தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து வருகிறது. 20.02.2024 அன்று சட்டப்பேரவையில் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நான்காவது வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

இயற்கை சார்ந்த சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கும் திட்டங்களை நிதி நிலை அறிக்கை முன்வைத்துள்ளது. மண்ணுயிர் பாதுகாக்கும் திட்டத்துக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. ஆடாதொடா, நொச்சி, செங்காந்தள் உள்ளிட்ட மூலிகை செடிகள் வளர்ப்பில் கவனம் செலுத்தியுள்ளது. சிறு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் உற்பத்திக்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மண்புழு உற்பத்திக்கு மானியம் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஒரு கிராமத்துக்கு ஒரு பயிர்" புதிய திட்டம் 15 ஆயிரத்து 280 கிராமங்களில் செயல்படுத்தப்படும் என்பது புதிய முயற்சியாகும். டெல்டா கால்வாய்கள் தூர்வார ரூ.110 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பாசனப் பரப்பளவு சுமார் ஒரு லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. கூட்டுறவுப் பயிர் கடனாக ரூ 16 ஆயிரத்து 500 கோடி இலக்கு நிர்ணயித்து அதற்கு ரூ.700 கோடி வட்டி மானியம் வழங்குவதாக உறுதியளித்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துக்கு ரூ.7 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலை உறுதியளிப்பு திட்டத்தில் வேலை அட்டை பெற்றுள்ள தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 150 நாள் வேலை வழங்கும் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. பேரிடர் காலங்களில் பேரிழப்புகளை சந்திக்கும் விவசாயிகளுக்கு காப்பீட்டு திட்ட உதவி முழுமையாக கிடைப்பதை உறுதி செய்வது அவசியமாகும்.**

**இது தொடர்பாக தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் தவிர பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும். ஒப்பீட்டு அளவில் வேளாண் வணிகம், பொறியியல் துறை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது. இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.**

**நிலத் தொகுப்பு சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை குறித்து நிதி நிலை அறிக்கையில் ஏதும் இடம்பெற வேண்டும்.**

பரந்துபட்ட பிரிவினரின் கருத்துக்களையும், தேவைகளையும் கேட்டறிந்து ஆக்கப்பூர்வமான திட்டங்களுடன் அமைந்துள்ள வேளாண் நிதிநிலை அறிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# காந்திகிராம பல்கலை.க்கு துணைவேந்தரை உடனடியாக நியமனம் செய்ய வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் தற்போதைய கூடுதல் பொறுப்பு துணைவேந்தர்களால் அதிக நேரம் ஒதுக்கியும், நேரடியாக பல்கலைக்கழகம் வந்தும் நிர்வாகம் செய்ய இயலவில்லை. இதனால் நிர்வாக தாமதம் ஏற்படுகிறது. முறையான நிரந்தர துணைவேந்தர் கடந்த நான்கு ஆண்டுகளாக இல்லாத நிலையில் பல்கலைக்கழகம் வளர்ச்சி நடவடிக்கைகள் எதுவும் இல்லாமல் இக்கட்டில் சிக்கியுள்ளது. ஓராண்டு ஆகியும் துணைவேந்தர் இன்னும் நியமனம் செய்யப்படவில்லை. துணை வேந்தரை நியமனம் செய்யாமல் காலம் தாழ்த்துவது பல்கலைக்கழகத்தை முடக்கும் இந்த செயல் கண்டனத்திற்குரியதாகும்.

உடனடியாக துணை வேந்தரை நியமனம் செய்திட வேண்டுமென ஒன்றிய கல்வி அமைச்சகத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மார்ச் 6ல் தமிழகம் முழுதும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

**ஏஐடியுசி உள்ளாட்சி சம்மேளனம் முடிவு**

தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனக் கூட்டம் காரைக்குடியில் ஆர்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் அறிக்கை வைத்து பேசினார். உள்ளாட்சி சம்மேளனத் தோழர்கள் பங்கேற்று பேசினர்.

**மார்ச் 6 இல் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்:**


"சமூக நீதி எல்லார்க்கும் எல்லாம்" கொள்கையை அமுலாக்க உடனடியாக நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட தலைநகர்களில் மார்ச் 6 அன்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திடவும், மாவட்ட ஆட்சியர்கள் வழியாக தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை மனு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகராட்சியில் கடந்த 07.01.2024 அன்று தூய்மை பணியாளர் சேவுகப்பெருமாள் கையால் கழிவை அகற்றும் போது வாயு தாக்கி உயிரிழந்தார்.

உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டவாறு இவ்வாறு உயிரழக்கும் தொழிலாளர் குடும்பத்திற்கு ரூபாய் முப்பது லட்சம் இழப்பீடு உடனடியாக அரசுகள் வழங்கிவிட்டு, உரியவர்களிடம் வசூலித்துக் கொள்ள வேண்டும். மேலும் அக்குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை, குழந்தைகள் கல்வி, மற்றும் மறுவாழ்வு வழங்குதல் வேண்டும்.

முதல் தவணை என்று ரூபாய் பதினைந்து லட்சம் வழங்கிவிட்டு காரைக்குடி நகராட்சி எஞ்சிய தொகையை வழங்காமல் காலம் கடத்தி வருகிறது. குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்க ஒப்புக் கொண்டுவிட்டு பொருத்தமில்லாத நிபந்தனைகளை விதித்து வருகிறது. காரைக்குடி நகராட்சி நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையை கண்டிக்கிறோம். மீதி நிவாரணரூபாய் பதினைந்துலட்சம் மற்றும் வேலை வாய்ப்பு உடனடியாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

# தோழர் மகபூப் பாட்ஷா மறைவுக்கு தமிழ்நாடு ஏஐடியூசி இரங்கல்



இடதுசாரி சிந்தனை கொண்டவர். இடது சாரி இயக்கங்களின் வளர்ச்சிக்கு இடையறாது உறுதுணையாக நின்றவர். கொத்தடிமை தொழிலாளர்களை மீட்கும் பணியில் இடையறாது போராடி எண்ணற்ற கொத்தடிமை தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு கிடைக்கச் செய்தவர். நவீன கொத்தடிமை முறைகளான சுமங்கலி திட்டம் போன்றவற்றில் இளம் பெண் தொழிலாளர்கள் இன்னல்கள் தீர போராடியவர்.

இன்றைய பாசிச பாஜக ஆட்சியின் அவலங்கள் மக்களை கடும் துயரத்தில் ஆட்படுத்தி வருகின்ற நிலையில் மக்கள் போராளி மகபூப் பாட்ஷா மறைவு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு ஆகும். தமிழ்நாடு ஏஐடியூசி சார்பில் அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## நச்சுன்னு நாலு பதில்!

1. **பாஜக அணியிலிருந்து வெளிவந்துவிட்ட அதிமுக பாஜக குறித்து விமர்சிப்பதில்லையே ஏன்?**

▸ வெளிவந்தது தேர்தலுக்காக! விமர்சிக்காமல் இருப்பது தேர்தலுக்குப் பின் நிலைமையை சமாளிப்பதற்காக

2. **அதிமுக வுக்காக பாஜகவின் கதவுகள் திறந்தே இருக்கிறது என்ற அமித்ஷா கூறுகிறாரே? எடப்பாடியின் பதில் என்ன?**

▸ எங்களுக்காக கதவுகளை திறக்க வேண்டாம், ஓபிஎஸ்க்கு கதவு திறக்காமல் இருந்தால் போதும்! என்று கெஞ்சுகிறார் எடப்பாடி,!

3. **நாம் தமிழர் கட்சியின் தேர்தல் சின்னம் பறி போய்விட்டதே! அதை மீட்க சீமான் என்ன முயற்சி எடுக்கிறார்?**

▸ சைதை துரைசாமியின் மகன் வெற்றி



துரைசாமி மறைவுக்கு அஞ்சலி செலுத்த வந்த சீமான் ஒரு மணி நேரம் காத்திருந்து அண்ணாமலையை கட்டித் தழுவினாரே! அதுதான் அவர் எடுத்த பெரும் முயற்சி!

4. **விமர்சனத்தை ஏற்று தனது கட்சி பெயரில் வெற்றிக்கு பக்கத்தில் 'க்' எழுத்தை சேர்த்திருக்கிறாரே நடிகர் விஜய்!**

▸ கட்சி துவங்கியதற்கான காரணத்தை மூன்று பக்க அறிக்கையாக வெளியிட்டாரே. அதுவும் விமர்சனத்திற்கு உள்ளானதே! அதை மாற்றி வேறொரு அறிக்கை விடுவாரா?

# பகுதி நேர நியாய விலைக் கடை கோரி ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் புளியக்குடி ஊராட்சி வடக்கு தோப்பு புளியக்குடியில் பகுதி நேர நியாய விலை கடை அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை வைத்து, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் நூற்றுக்கணக்கான பொதுமக்களுடன் சேர்ந்து மனுவாக வழங்கப்பட்டது.

பகுதி நேர அங்காடி அமைப்பதற்கு கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டு உள்ள நிலையில் ஊராட்சிமன்ற துணைத் தலைவர் பி. சுசீந்திரன், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேசன், ஒன்றிய நிர்வாகி டி. ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.



தென்காசி மாவட்டம் புளியங்குடியில் மக்கள் விரோத ஒன்றிய அரசை கண்டித்து நடைபெற்ற தெருமுனை பிரச்சாரம்.

# சேலத்தில் முப்பெரும் விழா!

மாமேதை லெனின் மறைந்த நூற்றாண்டு தினம், சேலம் சிறைத் தியாகிகள் தினம், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் நூற்றாண்டு தினம் திறந்தவெளிக் கருத்தரங்கம் ஆகியவை மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் நடைபெற்றது. முதல் நிகழ்வாக சிங்காரவேலரின் படத்திற்கு டி.வி.கருணைதாஸ், மாமேதை லெனின் படத்திற்கு ப.பரமசிவம் ஆகிய மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மாலை அணிவித்தனர்.

மாநில கட்டுப்பாட்டுக் குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன், மாநில செயற்குழு உறுப்பினர் திருப்பூர் எம்.ரவி, மாநில இளைஞர் பெருமன்ற செயலாளர் க.பாரதி, வங்கி ஊழியர் சங்கத் தலைவர் கே.சுவாமிநாதன், மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் பா.தினேஷ், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ் ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட பொருளாளர் டி.கண்ணன் நன்றி கூறினார். மாவட்ட துணைச்செயலாளர் ஏ.கந்தன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.பாலன், என்.கே.செல்வராஜ், எம்.பாலன், என்.எம்.சடையன் உட்பட திரளனானவர்கள் கலந்து கொண்டனர்.

# வத்திராயிருப்பு சிபிஐ வட்ட செயலாளர் கோவிந்தன் தந்தை மறைவு

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு கட்சியின் வட்ட செயலாளர் கோவிந்தன் அவர்களின் தந்தை நாகலிங்கம் (98) வயது மூப்பு காரணமாக காலமானார். தகவலிரிந்து தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம் பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, ஒன்றிய செயலாளர்கள் சக்கனன், நடராஜன், பலவேசம், ஜீவா, நகர செயலாளர் முத்து குமார், மூர்த்தி, மாதர்சங்க பாண்டிச்செல்வி, மாரீஸ்வரி உள்ளிட்டோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

## வினாடி - வினா விடைகள்

1 கண்புரை

2 கோபால்ட்

3 அனைத்துலகத் தொழிலாளர் சங்கம் (International Working Men's Association)

4 இரும்பு ஆக்ஸைடு

5 கழிமுகம்

6 இரண்டு முறை

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு திருமண மண்டபங்களில் அடைத்து வைக்கப்பட்டனர். ஏ.ஐ.டி.யூ.சி. எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., தொமுச சார்பில் ப.மணி, வி.ஆனந்த், ஐ.என்.டி.யூ.சி. பி.சண்முகம், சி.ஐ.டி.யூ. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.வேலுசாமி உள்ளிட்ட தலைவர்கள் கலந்துகொண்டனர். கோவை மாவட்டத்தில் 5 மையங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் ஏறத்தாழ 3 ஆயிரம் பேர் பங்கேற்றனர். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

### திருநெல்வேலி

நெல்லை வண்ணாரப்பேட்டையில் தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், ஆர்.சடையப்பன், ரெங்கன் உட்பட அனைத்து சங்க தோழர்கள் திரளாக மறியலில் பங்கேற்றனர். 700 பேர் கைது செய்யப்பட்டனர்.

### திருப்பூர்

திருப்பூர் ரெயில் நிலையம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருப்பூர் குமரன் நினைவகத்தில் இருந்து முழக்கமிட்டவாறு ஊர்வலமாகச் சென்று மத்திய தலைமை தபால் அலுவலகத்தை முற்றுகையிட்டு மறியலில் ஈடுபட்ட ஏஐடியுசி என்.சேகர், பி.ஆர்.நடராஜன் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

### கிருஷ்ணகிரி

ஓசூர்: சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன், எம்.லகுமைய்யா, எம்.கே.மாதையன் உள்பட அனைத்து தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மறியலில் ஈடுபட்டனர். எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் காவல்துறை கைது செய்ய மறுத்து விட்டது.

### மதுரை

மதுரை மாநகரில் ரயில் நிலையம் முன்பும், மேலூரிலும் மறியல் போராட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி கே.சேது, எம்.நந்தாசிங், மெய்யர் உள்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

### தருமபுரி

தருமபுரி, பென்னாகரம், அரூர் ஆகிய மூன்று இடங்களில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியலில் கலந்துகொண்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர். தருமபுரி தலைமை தபால் அலுவலகம் முன்பு நடந்த மறியல் போராட்டத்தில் 700 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். போராட்டத்திற்கு சிஐடியூ ஜீவா தலைமை வகித்தார். சிங்காரவேலன், ஏஐடியூசி கே.மணி உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றினர்.

பென்னாகரத்தில் இந்தியன் வங்கி முன்பு நடந்த மறியல் போராட்டத்திற்கு ஏஐடியூசி ஏ.சி.மணி தலைமை வகித்தார். ஏஐடியூசி முனுசாமி, கோவிந்தராஜ், பாலகிருஷ்ணன், சிஐடியூ வெங்கடேசன் உட்பட 200 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். அரூரில் நடந்த போராட்டத்திற்கு தொமுச பழனி தலைமை வகித்தார். ஏஐடியூசி முருகன், நடராஜன் உள்ளிட்டோர் உரையாற்றினர். 300 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

### கடலூர்

பண்ருட்டியில் நான்கு முனை சந்திப்பில் மறியல் போராட்டம் பி.துரை தலைமையில் நடைபெற்றது. எஸ்.கே.எம் சிவக்குமார், தேவராஜ், நடராஜன், பலராமன், மோகன், ஞானசேகர் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

### கன்னியாகுமரி

நாகர்கோவிலில் நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கு ஏஐடியுசி எஸ்.அனில்குமார் தலைமை தாங்கினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பெல்லார்மின் தொடங்கி வைத்தார். சிபிஐ மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

மார்த்தாண்டத்தில் நடைபெற்ற மறியலில் ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் ஜி.சுரேஷ் மேசியதாஸ் தலைமை தாங்கினார். மறியலில் ஈடுபட்ட 400க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

### நாமக்கல்

திருச்செங்கோடு இந்தியன் வங்கி முன்பு நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கு ஏஐடியுசி ஜெயராமன், சிஐடியு ராயப்பன், தொமுச முத்துசாமி ஆகியோர் தலைமை தாங்கினர். மறியலில் ஈடுபட்ட 270 பேர் கைது செய்யப்பட்டனர்.

### தூத்துக்குடி

எட்டையபுரம் பாரதி கூட்டுறவு நூற்பாலை, பாரத் பெட்ரோலியம், அரசு போக்குவரத்துக் கழகம், விரைவு போக்குவரத்துக் கழகம், மின்சார வாரியம், தூத்துக்குடி அனல் மின்நிலையம், என்.டி.பி.எல்., அனல்மின் நிலையம் ஆகிய நிறுவனங்களில் தொழிலாளர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தூத்துக்குடி அண்ணா பேருந்து நிலையம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி பாலசிங்கம், ஐஎன்டியூசி கதிர்வேல், சிஐடியூ மகாலெட்சுமி, தொமுச சுசீ ரவீந்திரன் உள்ளிட்டோர் தலைமை தாங்கினர். மாவட்டத்தில் மறியல் போராட்டத்தில் பங்கேற்ற 85 பெண்கள் உட்பட 300 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கோவில்பட்டியில் சாலை மறியலில் ஈடுபட்ட 120 பெண்கள் உட்பட 174 பேர் கைது செய்யப்பட்டனர். திருச்செந்தூரில் சாலை மறியலில் ஈடுபட்ட 130 பெண்கள் உட்பட 215 பேர் கைது செய்யப்பட்டனர். தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் 316 பெண்கள் உட்பட 600 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

### அரியலூர்

அரியலூரில் ஏஐடியூசி டி.தண்டபாணி, தொமுச ஆர்.மகேந்திரன், சிஐடியு பி.துரைசாமி, ஐஎன்டியூசி டி.விஜயகுமார் ஆகியோர் தலைமையில், ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட ஊர்வலமாகச் சென்றனர். அவர்களை தடுத்து நிறுத்தி காவல்துறையினர் கைது செய்தனர்.

### திருப்பத்தூர்

திருப்பத்தூர் ஸ்டேட் வங்கி முன்பு நடைபெற்ற மறியலில் ஏஐடியூசி கௌரவ தலைவர் எம்.சுந்தரேசன், ஒருங்கிணைப்பாளர் கே.ஆர்.வேணுகோபால் மற்றும் கே.பி.மணி, நாகலட்சுமி, டி.கே.ராமு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஆம்பூரில் ஏஐடியுசி கே.எஸ்.ஹேசேன், ஐஎன்டியுசி ஆனந்தவேல், தன்சிங், தொமுச பி.சிவகுமார் உள்ளிட்டோர் தலைமையில் இரயில் போராட்டம் நடைபெற்றது. 65 தோழர்கள் கைது செய்யபட்டனர்.

### தஞ்சை

தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, கும்பகோணம், பட்டுக்கோட்டை தலைமை அஞ்சலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. சி.சந்திரகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பாபநாசம் தலைமை அஞ்சலகம் முன்பு நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு ஏஐடியூசி மாநிலச் செயலர் தில்லைவனம் தலைமை வகித்தார்.

### ராமநாதபுரம்

ராமநாதபுரத்தில் என்.கே.ராஜன், தொமுச வின்சன் அமலதாஸ், சிஐடியு பாஸ்கரன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. 215 கைது செய்யப்பட்டனர். ராமேஸ்வரத்தில் ஏஐடியூசி சி.ஆர்.செந்தில்வேல் தலைமையிலும், சிஐடியு சிவாஜி தலைமையிலும் மறியல் போராட்டம் நடைபெற்றது. 210 பேர் கைது செய்யப்பட்டனர்.

தங்கச்சி மடத்தில் ஏஐடியுசி பாக்ஸ் தலைமையில் 20 பேரும், திருவாடானையில் ஏஐடியுசி குருசாமி, ஏஐசிசிடியு முத்துராமு தலைமையில் 120 பேரும், கமுதியில் 38 பேரும் பரமக்குடியில் 78 பேரும், முதுகுளத்தூரில் 60 பேரும் வாலிநோக்கத்தில் 80 பேரும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டனர்.

### செங்கல்பட்டு

செங்கல்பட்டில் ஏஐடியுசி ஜஹாங்கீர், தொ.மு.ச. இரா.பொன்னுராம் தலைமையில் ஊர்வலமாகச் சென்று, இந்தியன் வங்கி முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 350 பெண்கள் உட்பட 900 பேர் கைது செய்யப்பட்டனர். ஏஐடியுசி எம்.சங்கையா, டாக்டர் ஜி.ஆர்.ரவிந்திரநாத், சிஐடியு ஆறுமுக நயினார், தொமுச கே.ரவி, ஏஐசிசிடியு செ.இரணியப்பன் உள்ளிட்டோர் பேசினர்.

மறைமலைநகர் செக் பாயிண்ட், விர்கோ பாலிமர் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஏ.ராஜ்குமார், எல்.மேகநாதன், டாக்டர் ஏ.ஆர். சாந்தி, பி.எஸ்.ராமலிங்கம் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு சார்பாக வேலைநிறுத்தம் நடைபெற்றது. சதுரங்கபட்டினம் ரவுண்டானா அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அணுசக்தி ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.சின்ன கோவிந்தன் தலைமை தாங்கினார். அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் சி.எச்.வெங்கடாசலம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

### நீலகிரி

ஊட்டி ஏடிசி பகுதியில் மறியல் போராட்டத்திற்கு சிஐடியு வினோத் தலைமை வகித்தார். ஏஐடியுசி போஜராஜன், தொமுச ஜெயராமன் உள்ளிட்டோர்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஆளுநரைக் கண்டித்து அம்பத்தூரில் ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு சட்டமன்றத்தில் மரபுகளை மீறி ஆளுநர் உரையை வாசிக்காமல் புறக்கணிப்பு செய்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஆளுநர் ரவியின் ஜனநாயக விரோத போக்கை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அம்பத்தூரில் கட்சியின் பகுதி செயலாளர் இரா.விஜயகுமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் ப. மாரியப்பன், கட்டட சங்க மாநிலச் செயலாளர் இரா துரைசாமி. சிபிஎம் லெனின் சுந்தர், காங்கிரஸ் மோகனரங்கம், மதிமுக தாமோதரன், திராவிடர் கழகம் கார்வேந்தன், மனிதநேய மக்கள் கட்சி அப்துல் ரகுமான், தோழர் சுந்தரமூர்த்தி, நாகராஜன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார்கள்.

# பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் பணிநிரந்தரம் கோரி ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும், பல் நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்கிட, தமிழ்நாடு அரசை வலியுறுத்தி, கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம், தமிழ்நாடு மருத்துவத் துறை பணியாளர் கூட்டமைப்பு மற்றும் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், கூட்டமைப்பின் தலைவர் பி.காளிதாசன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி யின் மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் ஆர்ப்பாட்டத்தை துவக்கிவைத்தார்.

தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, பல்நோக்கு மருத்துவப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர்கள் எம்.சங்கர், சரவணன், கணேசன், ராஜா, கண்மணி, ஜனனி, மாலதி ஆகியோர் உரையாற்றினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் நிறைவு உரையாற்றினார்.

## தேசிய நல்வாழ்வு தமிழ்நாடு இயக்குநருடன் மருத்துவ சங்க நிர்வாகிகள் சந்திப்பு

எய்ட்ஸ் கட்டுப்பாட்டு துறையில் பணிபுரியும் ஆற்றுப்படுத்துனர்கள் மற்றும் லேப் டெக்னிசி யன்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக, தேசிய நலவாழ்வு தமிழ்நாடு இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ் ஐ.ஏ.எஸ். அவர்களை சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், தமிழ்நாடு மருத்துவத் துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் பி.காளிதாசன், பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் சந்தித்தனர்.

## அமைச்சருடன் டாஸ்மாக் பணியாளர் சங்க மாநில நிர்வாகிகள் சந்திப்பு



தமிழ்நாடு அரசின் நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களை, தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் (ஏஐடியுசி) மாநில நிர்வாகிகள் 16.02.2024 ஆம் தேதி ஈரோட்டில் அவரது முகாம் அலுவலகத்தில் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

# பைக் டாக்சியை தடைசெய்ய தென்சென்னை ஆட்டோ சங்க மாநாடு வலியுறுத்தல்



தென்சென்னை செங்கொடி ஆட்டோ டாக்ஸி மற்றும் வேன் ஓட்டுனர் சங்கத்தின் 7 வது மாவட்ட மாநாடு 17.2.24 அன்று ஈக்காட்டுத்தாங்கலில் நடைபெற்றது. ஏஐடியூசி கொடியினை மூத்த தோழர் ஜி.எம்.பூபதி ஏற்றி வைத்தார்.

மாநாட்டை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் கௌரவத்தலைவராக எஸ்.ஏழுமலை, தலைவராக எம்.இரங்கநாதன், செயலாளராக ஜி.சுப்பிரமணி, பொருளாளராக எஸ்.ஹரி உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

மாநாட்டில் ஏஐடியூசி தேசியசெயலாளர் டி.எம். மூர்த்தி, மாவட்ட ஏஐடியூசி யின் கௌரவத்தலைவர் எஸ்.ஏழுமலை, ஏஐடியூசி மாநிலசெயலாளர் ஆ.பாஸ்கர், ஆட்டோசங்க மாநிலச்செயலாளர் பி.மாரியப்பன், மாவட்ட பொதுச்செயலாளர் ஆர்.அழகேசன் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினார்கள்.

பைக்டாக்ஸியை தடைசெய்ய வேண்டும், விபத்தை கொலை வழக்காக பதிவுசெய்யும் புதிய மோட்டார் வாகன சட்டத்தை தடைசெய்ய வேண்டும், ஆட்டோதொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கவேண்டும் எனபன உள்ளிட்ட தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சீர்காழியில் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகம் திறப்பு

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில், முனைவர்.எஸ்.ஆர். அரங்கநாதன் நினைவு நூலகம் கட்டிடம் ரூ. 1 கோடியே 32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இந்நூலகமானது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. இதில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்தார்கள்.

சீர்காழி வட்டாரத்தின் பொதுமக்கள் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் இடைவிடாது முயற்சியில் நூலக கட்டடம் புது பொலிவுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

## தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்



விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் நடைபெற்றது. வட்ட செயலாளர் செல்வம் தலைமை வகித்தார். துணை செயலாளர் பெரியண்ணன் முன்னிலை வகித்தார். வீடுவீடாக வசூல் செய்த ரூ50000த்தைப் பெற்றுக்கொண்டு தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ சிறப்புரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் எஸ். பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், ஏஐடியுசி தங்கராஜ் ஆகியோர் பேசினார்கள்.

## வேலைப் பளுவை கண்டித்து துப்புரவு தொழிலாளர்கள் பேரணி

அரியலூர் நகராட்சியில் துப்புரவு பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கை எதனையும் ஒப்புக்கொண்டவாறு நகராட்சி நிர்வாகம் நிறைவேற்றிட முன் வரவில்லை. மாறாக வேலை பளுவை மேலும் மேலும் தொழிலாளர்கள் மீது திணித்து பழி வாங்கும் போக்கினைக் கையாண்டு வருகிறார்கள். இதனைக் கண்டித்தும், உரிய தீர்வு காண வலியுறுத்தி துப்புரவு தொழிலாளர்கள் 14.2.2024 அன்று பழைய நகராட்சி அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு நகராட்சி ஆணையர் மகேஸ்வரி அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தனர். இதில் உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநில செயலாளர் த.தண்டபாணி, சங்க செயலாளர் ரெ.நல்லுசாமி உட்படத் திரளானோர் கலந்து கொண்டனர்.

## ஆண்டிப்பட்டி பேரூராட்சி தலைவரை கண்டித்து ஆர்ப்பாட்டம்

ஆண்டிபட்டி பேரூராட்சி தலைவரின் ஊழல், மோசடி முறைகேடு மற்றும் அராஜக போக்குகளை கண்டித்து ஆண்டிபட்டி நகரில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் 10வது வார்டு சிபிஐ கவுன்சிலர் மீனாட்சி தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் பா. பிச்சைமணி ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். நகர செயலாளர் க. முனீஸ்வரன், மாவட்டக்குழு உறுப்பினர் திருமலை கொழுந்து, மாவட்டக்குழு உறுப்பினர் பி.மணவாளன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினார்கள். மாவட்ட துணை செயலாளர் வே.பரமேஸ்வரன் ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து பேசினார்.

## இந்த வார தம்பிக்குறள்

**152. வரலாறு**

**வரலாறு வாய்மை அறியின் உரமூறும்**
**ஊஉற்றுக் கண்பீஇ றிட்டு.**

உண்மையான வரலாற்றையும், அதன் உள்ளே உள்ள வாய்மை நிலையையும், அறிபவர்க்கு அறிவு ஊற்றுக்கண்ணாக எழுந்து பீறிடும். (வரலாற்றையும் பொருள்முதல் நோக்கில் பார்க்கவேண்டும்).

**வரலா றெனப்படுவ தியாதெனின் வாழ்வின்**
**வினோதம் காட்டு மது.**


நாட்டில் ஏற்படும் வியக்கத்தக்க செயல்களையே, காட்டக் கூடியது வரலாறாகும். (சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களையும் சமூக வரலாறு காட்டும்).



அ.பாஸ்கர்

# தியாக வாழ்வின் மனித சாட்சி

நினைவு நாள் பிப்ரவரி 26



தோழர் எம்.காத்தமுத்து

**ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் முக்கிய நகரமான மயிலாடுதுறையில் 1918ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாள். மாணிக்கம் செட்டியார் – நாகரத்தினம் தம்பதியினருக்கு மூத்த மகனாக பிறந்தவர் தோழர் மா.காத்தமுத்து.**

மயிலாடுதுறை நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப் படிப்பை பெற்ற எம். காத்தமுத்து பயிலும் காலத்திலேயே நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப்பட்டார். உரிய வயதை அடைந்ததும் காங்கிரஸ் இயக்கத்தில் உறுப்பினராக இணைந்து செயல்படத் தொடங்கினார்.

நாகப்பட்டினத்தில் ரயில்வே தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்து பணிபுரிய தொடங்கினார். இங்கு ரயில்வே தொழிலாளர்களை அணிதிரட்டி, தொழிற்சங்க இயக்கத்தில் முனைப்போடு செயல்பட்டார். இதன் மூலம் சமூகம் குறித்த புதிய பார்வை பெற்று, தொழிலாளி வர்க்கத்தின் ஆற்றலை ஒருங்கிணைப்பதில் தீவிரமாக செயப்பட்டு வந்தார்.

1947இல் நாடு விடுதலை பெறும் சூழலில், தாய்நாடு பிளவுபட்டது. ஆங்கில அரசு இந்தியா – பாக்கிஸ்தான் என இரு நாடுகளாக்கியது.

இதன் காரணமாக இந்து – முஸ்லிம் மோதல்கள் கலவரங்களாக வெடித்தன. நாட்டின் எல்லைப் பகுதி முழுவதும் மனித இரத்தம் கொட்டியது. மண்ணில் விழுந்த ரத்தம் மத பேதங்களை நிராகரித்து ஒன்று கலந்தன.

பாகிஸ்தான் – இந்தியப் பகுதிகளை இணைத்து வந்த ரயில் போக்குவரத்து முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது. இதனால் படுகொலைகள், உயிரிழப்புகள் அதிகரித்து வந்தன.

இந்தக் கலவரப் பகுதிகளில் இருந்த இந்துக்களும், முஸ்லிம்களும் தங்களின் உயிருக்கு பயந்து ரயிலை ஓட்ட மறுத்தனர். அந்த சமயத்தில் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டில் இருந்து ரயில்வே தொழிலாளர்கள் ரயிலை ஓட்ட பஞ்சாப் செல்கிறார்கள்.

சுமார் ஐந்து மாத காலம் ரயில் வண்டிகளை ஓட்டி லட்சக்கணக்கான இந்துக்களையும், முஸ்லீம்களையும், கொலைவெறியர்களிடமிருந்து பாதுகாத்து அவரவர் விரும்பிய பகுதிகளில் கொண்டு சேர்த்தபெருமை தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்களுக்கு உண்டு.

இத்தகைய உருக்கு போன்ற மன உறுதி படைத்த தொழிற்சங்க இயக்கத்தின் முன்னணி தலைவராக செயல்பட்டவர் எம்.காத்தமுத்து. தனது பொது வாழ்வுப் பயணத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை தேர்வு செய்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட முதல் மாநாடு 1947 டிசம்பர் 29, 30 தேதிகளில் கும்பகோணத்தில் நடைபெற்றது.

மாநிலக் குழு உறுப்பினர், மாநில நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர் என தொடர்ந்து தேசியக் குழு உறுப்பினராக உயர்ந்தவர்.

இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய தலைவர், பொருளாளர், தமிழ்நாடு மாநிலச் செயலாளர் என வர்க்க அமைப்பிலும் வரலாறு படைத்தவர்,

நாகபட்டினம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பில் ஆறாண்டுகள் பணியாற்றி, காவிரி நதிநீர் உரிமைப் போராட்டத்திற்கு அடித்தளமிட்டவர், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் பிரச்சினைகளை பேசும் "உழவு செல்வம்" பத்திரிக்கையின் ஆசிரியராக செயல்பட்டவர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் கட்டுப்பாட்டு குழு தலைவர் பொறுப்பிலும் மா.காத்தமுத்து செயல்பட்டார்.

சொகுசு வாழ்க்கையை ஒரு போதும் விரும்பாத மனிதர், நான்கு முழ வேட்டி, ஜிப்பா அவரின் எளிய உடை.

ஒன்று பட்ட தஞ்சை மாவட்டத்தில் அவர் கால் பதியாத தெருக்கள் எதும் இல்லை.

தஞ்சை மாவட்டம் முழுவதும் கம்யூனிஸ்ட் பேரியக்கத்தை கட்டமைத்து, கிராமங்கள் வீறுநடை போட வைத்தவர் "ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வரலாறு உண்டு" என்பதை தனது எழுத்தின் மூலம் எடுத்துரைத்தவர்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வர்க்கப் போராளியாக கடைசி வரை திகழ்ந்தார். 73 ஆண்டுகள் வாழ்ந்த அவர், 56 ஆண்டுகள் தமக்கென வாழாமல் பொதுவாழ்வில் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி பொதுவாழ்க்கைக்கு பெருமை சேர்த்தவர்.

கண்ணியமிக்க மனிதராக கடைசிவரை, நெறி சார்ந்து வாழ்ந்த புரட்சியாளராக திகழ்ந்தார் தமது குடும்பத்திற்கு என எதனையும் செய்து கொள்ளாதவர். அவர் வாழ்நாளில் அவருக்கு பலரும் அளித்த கௌரவ பட்டம் "பிழைக்கத் தெரியாத மனிதர்" என்பதே!

ஆம் அதனை விட மேலான பட்டம் எதுவும் இருக்க முடியாது.

தோழர் எம்.காத்தமுத்து அவர்களின் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களும், அரசியல் வாழ்வில் அவர் கையாண்ட வழிமுறைகளை நாம் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

பிப்.26 அவரது நினைவு நாள்.

தொடர்புக்கு: 94884 88339

## அடித்தால் திருப்பி அடி

**தஞ்சை மாவட்டத்தில் செங்கொடி இயக்கத்தை கட்டுவதற்கும், பண்ணை நிலப்பிரபுக்களின் அடிமையாய் வாழ்ந்த "பண்ணையாட்களை" மக்களை "அடித்தால் திருப்பி அடி" என்ற சீனிவாசராவின் முழக்கத்திற்கு தைரியம் தந்து, பண்ணையாட்களின் அடிமை விலங்கை உடைத்தெறியும் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.**

**தோழர்.பி.சீனிவாசராவோடு 12 ஆண்டுகள் இணைந்து பணியாற்றி பல்வேறு அனுபவங்களை கற்றுணர்ந்துவர்.**

**ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் 17 ஆண்டுகள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளராக பணியாற்றியவர். எளிமை, நேர்மை என்ற இலக்கணத்திற்கும், தியாக வாழ்வின் மனித சாட்சியாகவும் வாழ்ந்து காட்டியவர். வர்க்கப் போராட்ட வழியில் களம் பல கண்டு வெற்றி கண்ட தீரர்.**



# சமூகப் போராளி எம்.சுந்தரம்பாள்



**திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் நுணாக்காடு ஊராட்சியில் ஆட்டூர் பண்டார ஓடை கிராமத்தில் சிறுவயதில் ஆடு மாடு மேய்க்க போகும்போது தலைமறைவு இயக்க தலைவர்களிடம் இரகசிய கடிதங்களை ஒப்படைப்பார் சுந்தரம்பாள்.**

அதிகாலை எழுந்து பண்ணை வீடுகளுக்கு சென்று மாட்டுக் கொட்டில்களை கூட்டி, அள்ளி, சுத்தம் செய்து பின் வயலுக்கு சென்று இருட்டும் வரை வேலை செய்து, இரவு வீட்டிற்கு வந்து பல நேரங்களில் ஈரமாக உள்ள நெல்லை சட்டியில் போட்டு வறுத்து குத்தி, பெற்ற பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் உணவு கொடுத்து விட்டு பெண்கள் உறங்க போகும் போது இரவு 2 மணி ஆகிவிடும். பின் 4.00 மணிக்கு எழுந்து வீட்டு வேலைகளை பார்த்துவிட்டு மீண்டும் பண்ணைக்குச் செல்ல வேண்டும். இதுதான் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு நிலை.

உடல் நலக்குறைவால் வேலைக்கு செல்ல காலதாமதம் ஆகிவிட்டாலும் குடும்பத்தார்கள், உறவினர்கள் முன்னிலையில் கட்டி வைத்து அடித்து பயமுறுத்தும் கொடுமை காவிரி டெல்டா முழுவதும் தினம் தினம் நடக்கும். பண்ணை ஆட்களின் கொடுமை இப்படி இருக்கும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் நிலச்சுவான்தார்களின் அடக்குமுறைகளை எதிர்த்து போராட்டங்கள் நடத்தி, மக்களை ஒன்று திரட்டி வந்தது.

அந்தப் புரட்சிகர இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு உழைக்கும் பெண்களை அடக்கு முறையிலிருந்தும், சமூகத்தில் நிலவிக் கொண்டிருந்த மூடப்பழக்க வழக்கத்தினால் ஏற்படும் துன்பங்களிலிருந்தும், விடுவிக்க வேண்டும் என்பதற்காக பெண்களை அணி திரட்டும் செயலில் தீவிரமாக ஈடுபட்டார்.

மீனாட்சி சுந்தராம்பாளின் வழிகாட்டுதலோடு, அவருக்கு மூத்தவரான சுந்தராம்பாள் திருத்துறைப்பூண்டி தாலுகா கமிட்டி செயலாளராக இருந்து செயல்பட்டார். சுந்தராம்பாள் குடும்ப அனுமதியோடு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை தான் வீட்டிற்கே வருவாராம். இவர் வெள்ளை அல்லது சிவப்பு ஜாக்கெட் தான் அணிந்து இருப்பார். அதிகமாக நீல கலர்நூல் புடவை உடுத்துவார். காதறுந்த ஜவுளிக்கடை பையில் கட்சி மற்றும் சங்க நோட்டீஸ்களை அள்ளிப் போட்டுக் கொண்டு காலில் செருப்பு இன்றி நடந்தே வருவாராம்



சு.தமிழ்ச்செல்வி ராஜா

தோழர் சுந்தரம்பாள் வந்து விட்டால், அம்மா வந்து விட்டாங்க, அம்மா வந்துட்டாங்க என்று ஊரே கூடி விடுமாம், இவர் கிராமங்கள் தோறும் இந்திய மாதர் தேசிய சம்மேளன அமைப்பை உருவாக்கினார்.

ஒவ்வொரு கிராமத்திலும் இரவு தங்கி அவர்களோடு இரண்டற கலந்து பழகியதால் "வெல்லக்கட்டி வீதியில் கிடந்தால் எறும்புகளும் ஈக்களும் மொய்ப்பது" போன்று தோழர் சுந்தரத்தம்மாள் வந்து விட்டாலே கூட்டம் கூடி விடுமாம்.

ஊர் ஊராகச் சென்று இரவு நேரங்களில் பெண்களைத் திரட்டி மாதர் அமைப்பை கிராமம், கிராமமாக ஏற்படுத்தினார். நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கும், நிலச்சுவந்தார்களின் கொடுமையை எதிர்ப்பதற்கும் அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் மத்திய, மாநில அரசுகளையும், அரசு எந்திரத்தையும் உத்வேகத்தோடு எதிர்த்து போராடுவதற்கான பயிற்சிகளை கொடுத்திருக்கிறார்.

1982 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் "பாரத் பந்த்" நடைபெற்ற பொழுது மன்னை, திருத்துறைப்பூண்டி சாலையில் மறியல் நடைபெற்றது. மறியலுக்கு தலைமைத் தாங்கிய விவசாய சங்கத் தலைவர் எம். சிவஞானம் அவர்களை காவல்துறை அடித்து மண்டையை இரண்டாகப் பிளந்தது. அதை பார்த்து ஆவேசம் கொண்ட சுந்தராம்பாள் காவல்துறையின் சட்டையை பிடித்து கிழித்த போது, தடியால் தாக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பெண்களின் விடுதலைக்காக, பெண் குழந்தைகள் படிப்புக்காக, பெண்களின் சமத்துவத்திற்காக பல போராட்டங்களை தலைமை ஏற்று நடத்தியவர் தான் சுந்தரம்பாள். பெண் குலத்தின் மாணிக்கமாக விளங்கிய சுந்தராம்பாள் 26.02.2000 ல் மறைவுற்றார்.

அவர் இறந்த தினத்தை ஆண்டுதோறும் நுணாக்காடு கிளையும், ஒன்றிய இந்திய மாதர் தேசிய சம்மேளனமும் இணைந்து நடத்தி வருகிறோம்.

பெண்களுக்கு போராட்டத்தையும், வீரத்தையும் விதைத்த சுந்தரம்பாளுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்.

தொடர்புக்கு: 9786877195

நினைவு நாள் பிப்ரவரி 26










12ஆம் பக்க தொடர்ச்சி

கண்டன உரையாற்றினர். இதேபோன்று கூடலூர் பந்தலூரிலும் மறியல் போராட்டம் நடைபெற்றது. 280 பேர் கைது செய்யப்பட்டனர்.

**சிவகங்கை**

சிவகங்கையில் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற மறியல் போராட்டத்தில், ஏஐடியுசி ஏ.ஜி.ராஜா உட்பட 600 பேர் கைது







செய்யப்பட்டனர். காரைக்குடியில் ஏஐடியுசி பி.எல்.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் தலைமையில் மறியலில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். காரைக்குடி, தேவகோட்டை நகராட்சி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுடன், மறியல் போராட்டத்திலும்













பங்கேற்றனர்.

**திருவள்ளூர்**

கும்மிடிப்பூண்டியில் 200 க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாகச் சென்று மறியலில் ஈடுபட்டனர். அவர்களில் 88 பேர் கைது செய்யப்பட்டனர். ஜே.அருள், எம்.பார்த்திபன், எஸ்.எம்ரோஸ், உமாநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதேபோன்று திருவள்ளூரில் நடைபெற்ற மறியலில் 50 பேரும், செங்குன்றத்தில் 161 பேரும் கைது செய்யப்பட்டனர்.

**வேலூர்**

வேலூரில் ஏஐடியுசி மாநிலச் செயலாளர் ஆர்.ஆறுமுகம், மாவட்டப் பொதுச்செயலாளர் எஸ்.சுப்பிரமணி, எம்.ஜீவா, எல்.மணி உள்ளிட்டோர் மறியலில் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

குடியாத்தம் புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற மறியலில், ஏஐடியூசி மாவட்ட கௌரவத்தலைவர் ஜி. லதா, துரைசெல்வம், ஜி. எஸ். மூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கரூர்**

கரூர் ஜவஹர் பஜார் அஞ்சல் நிலையம் அருகே ஏஐடியுசி ஜி.பி.எஸ்.வடிவேலன் உள்ளிட்டோர் தலைமையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 488 பேர் கைது செய்யப்பட்டனர்.

**தேனி**

தேனியில் எம்.எஸ்.பி.ராஜ்குமார் தலைமையில் 250 பேரும் கம்பத்தில் ஏஐடியுசி பெ.தங்கம் தலைமையில் நடைபெற்ற மறியலில் 234 பேரும், கூடலூரில் 113 பேரும், ஆண்டிபட்டியில் ஏஐடியுசி சென்றாயப்பெருமாள் தலைமையில் 115 பேரும் மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டனர்.

**கள்ளக்குறிச்சி**

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தொ.மு.ச திராவிட மணி தலைமை தாங்கினார். கே.எஸ். அப்பாவு, செந்தில், ஜெய்கணேஷ், வளர்மதி, கோவிந்தராஜ், ரீத்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சின்னசேலம் பேருந்து நிலையம் அருகே கே.ஜான்பாஷா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், டி.மாரிமுத்து, பழனி, கே.கபில்தேவ் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

கச்சிராயபாளையம் பேருந்து நிலையம் அருகே ஏ.வி.ஸ்டாலின் மணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அன்பு, சன்னியாசி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விருதுநகர்**

விருதுநகரில் நடைபெற்ற மறியலில் ஏஐடியுசி பாலமுருகன், சக்கணன், பாண்டியன், முத்துக்குமார் உள்ளிட்டோரும் சாத்தூரில் நடைபெற்ற மறியலில் எஸ்.பழனிக்குமார், சுவாமிநாதன், ஜான்ராஜா உள்ளிட்டோரும் கைது செய்யப்பட்டனர். இதேபோன்று திருச்சுழி, அருப்புக்கோட்டை, சிவகாசி, வத்திராயிருப்பு, இராஜபாளையம், ஆலங்குளம் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற மறியலில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.

**தென்காசி**

தென்காசி மாவட்டத்தில் சிவகிரி, தென்காசி, சங்கரன்கோவில், ஆலங்குளம் ஆகிய இடங்களில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் 185 பெண்கள் உட்பட 500 பேர் கைது செய்யப்பட்டனர்.

**நாகப்பட்டினம்**

கீழ்வேளூர், வேதாரண்யம் ஆகிய இடங்களில் மறியல் நடைபெற்றது.

**திருச்சி**

மணப்பாறை பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ராஜேந்திரன், சீனிவாசன் ஆகியோர் தலைமை வகித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் இந்திரஜித், மாவட்ட செயலாளர்கள் பழனிச்சாமி, சிதம்பரம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ■

## உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக ஆக்க வேண்டும்

# சட்ட மாணவர்களின் எழுச்சிகரமான மாநில மாநாடு

**அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் சட்ட மாணவர்கள் மாநில மாநாடு 17.02.2024ஆம் தேதி கோவை கோ இந்தியா வளாகத்தில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல்வேறு சட்டக் கல்லூரிகளில் இருந்து 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.**













மாநாட்டிற்கு பா. நி.சினேகா, ஜெ.பாரதசெல்வன், பி.எஸ்.சேகுவேரா, டி.செல்வி, பி.வர்ஷா ஆகியோர் தலைமை தாங்கினர்.

மாநாட்டுக் கொடியினை இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் தேசிய துணைத் தலைவர் கே.சுப்ரமணியன் ஏற்றி வைத்தார். மகாத்மா காந்தி படத்தை வழக்கறிஞர்கள் சங்க மாநிலச் செயலாளர் வழக்கறிஞர் ஜி.பி.சக்திவேல், டாக்டர். அம்பேத்கர் படத்தை வழக்கறிஞர் ப.மோ.சுபாஷ், நீதியரசர் வி ஆர்.கிருஷ்ணய்யர் படத்தை பொதுச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், என்.டி.வானமாமாலை படத்தை மாநில துணைத் தலைவர் வெ.நிரூப் ஆகியோர் திறந்து வைத்தனர்.

மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மு.பிரசாந்த் வரவேற்றுப் பேசினார். மாணவர் பெருமன்ற தேசிய பொதுச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் துவக்கவுரையாற்றினார். சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு, மாணவர் பெருமன்ற முன்னாள் மாநில செயலாளர் வழக்கறிஞர் ப.பா.மோகன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

வழக்கறிஞர் கே.சுப்பிரமணியன் எழுதிய 'பில்கிஸ் பானு நீதியைத் தேடி நீண்ட பயணம்' என்றநூலும் முன்னாள் நீதிபதி, கே.சந்துரு எழுதிய 'பொது சிவில் சட்டம் தேவையற்ற ஆணி' ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

இந்திய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், மாணவர் பெருமன்ற முன்னாள் மாநில தலைவர் மௌ.குணசேகர், மாநில தலைவர் க.இப்ராஹிம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் பா.தினேஷ் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் ச.கல்பனா நன்றியுரையாற்றினார். மாநாட்டில், பறை இசை, பாடல், நடனம், கவிதை வாசித்தல் உள்ளிட்ட பல்சுவை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.



## மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும்,
2. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்க வேண்டும்,
3. குற்றவியல், தண்டனைச் சட்டம் உள்ளிட்டவற்றை திருத்தக்கூடாது,
4. பொது சிவில் சட்டத்தை கைவிட வேண்டும்,
5. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு கட்டணமில்லா பஸ் பாஸ் வழங்க வேண்டும்,
6. நீதிமன்றங்களுக்கு அருகிலேயே சட்டக் கல்லூரிகள் அமைக்க வேண்டும்,
7. துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்க சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும்,
8. மாணவர்களின் கல்விக் கடனை ரத்து செய்ய வேண்டும்,
9. பீமா கொரேகான் உள்ளிட்டு இந்தியா முழுவதும் மாணவர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை ஒன்றிய அரசு திரும்பப் பெற்று, எவ்வித நிபந்தனையின்றி உடனே விடுதலை செய்ய வேண்டும்.
10. இஸ்ரேல் பாலஸ்தீன போரை உடனே நிறுத்த வேண்டும்,
11. ரஷ்யா உக்ரைன் போரை உடனே நிறுத்த வேண்டும்,
12. நேட்டோவின் இராணுவ எல்லை விரிவாக்கத்தை அமெரிக்கா உடனே நிறுத்த வேண்டும்
13. மாணவர் பெருமன்ற மாநாட்டிற்கு தற்காலிக கொடிக் கம்பம்அமைக்க அனுமதி மறுத்ததோடு அடாவடியில் ஈடுபட்ட பீளமேடு காவல் ஆய்வாளர் நடேசனுக்கு கண்டனம் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



## அரசியலமைப்புச் சட்டத்தை உயர்த்திப் பிடிப்பவர்கள் கம்யூனிஸ்ட்டுகள்

### நீதிபதி கே.சந்துரு பேச்சு




இரண்டரை ஆண்டுகள் உழைத்து, 1,324 திருத்தங்களை எதிர்கொண்டு அம்பேத்கர் அரசியல் சட்டத்தை வடிவமைத்தார்.

1949 நவம்பர் 26 ஆம் நாள் அவர் அரசியல் நிர்ணய சபையில் ஆற்றிய உரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த அவையில் அப்போது கம்யூனிஸ்ட்கள் இல்லை, சோசலிஸ்ட்கள் இல்லை. அது குறித்து அவர் மிகவும் வருத்தப்பட்டார். நாம் அரசியல் விடுதலை பெற்று விட்டோம், பொருளாதார விடுதலையை, சமூக விடுதலையை நாம் இன்னும் பெறவில்லை. அதைப் பெறவில்லை என்றால் இந்த சட்டம் சுக்குநூறாய் போய்விடும், இந்த சட்டத்தினால் ஒரு பயனும் இருக்காது என்று குறிப்பிட்டார்.

இன்றைக்கு ஆளும் பா.ஜ.க. அரசு, சட்டத்தை சுக்குநூறாக்கி கொண்டிருக்கிறது. ஆனால் கம்யூனிஸ்டுகள் சட்டத்தைப் பாதுகாக்க போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

75 ஆண்டுகளுக்கு பின்னர், இந்த அரசியல் சட்டத்தை உயர்த்தி பிடிப்பவர்களாக கம்யூனிஸ்டுகள் மட்டுமே இருக்கிறார்கள்.

இன்றைய தலைமுறை நிறைய படிக்க வேண்டும். படிக்கவில்லை என்றால் இடிப்பார்கள், இடிப்பதை நம்மால் தடுக்க முடியாது.

நாம் படிக்கவில்லை என்றால் நமக்கு வரலாற்றை தவறாக சொல்லிக் கொடுப்பார்கள். ஒருவர் ஒரு இடத்தில் 12 ஆண்டுகள் இருந்து விட்டாலே அந்த இடம் அவருக்கு சொந்தம். இதைத்தான் சட்டம் சொல்கிறது. அமெரிக்காவில் அதே சட்டம் 14 ஆண்டுகள் என்று இருக்கிறது. உலக நாடுகள் முழுமையும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அதில் சிறு, சிறு வேறுபாடுகள் இருக்கலாம். இந்த சட்டம் ராமாயண காலத்திலிருந்து இருக்கிறது. எனவேதான் கைகேயி, ராமன் 14 ஆண்டுகள் வனவாசம் போகவேண்டும் என்று தசரதனிடத்தில் வரம் கேட்டாள்.

அதன் பொருள் பரதன் 14 ஆண்டுகள் அரசுப் பொறுப்பில் இருந்து விட்டால் அது அவனுக்கு சொந்தமாகிவிடும் என்பதுதான்.

கோயிலை இடித்தவர்களுக்கு பாரத ரத்னாவும், பத்ம விபூஷணும், மாநிலங்களவை உறுப்பினர் பதவியும் வழங்கப்படுகிறது.

பாரதி, 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை கண்ணீரால் காத்தோம்', என்று நம் சுதந்திரத்தை பற்றி எழுதினார். இன்றைக்கு நம்முடைய சுதந்திரம் பறிபோய் கொண்டிருக்கிறது. எனவே, மாணவர்கள் நன்றாக படிக்க வேண்டும். தெளிவாக புரிந்து படிக்க வேண்டும். கல்விதான் எல்லாவற்றையும் மாற்றும் என்று நீதிபதி சந்துரு பேசினார்.

## ஒருங்கிணைப்புக் குழு

மாநாட்டில், 25 பேர் கொண்ட சட்ட மாணவர்கள் ஒருங்கிணைப்புக் குழு தேர்வு செய்யப்பட்டது.

ஒருங்கிணைப்பாளர்
பா.நி.சினேகா (கோவை)

துணை ஒருங்கிணைப்பாளர்கள்
ஜெ.பாரதசெல்வன் (திருவாரூர்)
சேகுவேரா (சேலம்)
செல்வி (திருச்சி)
வர்ஷா (சென்னை)
ஞானபிரகாஷ் (ஈரோடு)

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.